## பகுதி II

## 2. வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்

### 2.1 வினாத்தாள் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான தகவல்களும்

#### 2.1.1. வினாத்தாள் I - கட்டமைப்பு

**நேரம் : 1 மணித்தியாலம். மொத்தப்புள்ளிகள் 40**

- ★ நான்கு விடைத் தெரிவுகளைக் கொண்ட 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்ட (1), (2), (3), (4) விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்தல் வேண்டும்.
- ★ முழுப் பாடப்பரப்பையும் உள்ளடக்கி வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
- ★ எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

PAST PAPERS WIKI

## 2.1.2. வினாத்தாள் I

1. 'வம்சத்தப்பகாசினி' என்பது எந்த வரலாற்று நூலுக்கு எழுதப்பட்ட உரைநூல் (டீகாவ) ஆகும் ?
   (1) தீபவம்சம் (2) மகாவம்சத்தின் முதலாம் பாகம்
   (3) தூபவம்சம் (4) போதிவம்சம்

2. புராதன காலத்தின் இலக்கிய, சமயத் தகவல்கள், வம்சக் கதைகள் என்பன எழுதப்பட்டிருப்பது,
   (1) ஓலைகளிலான ஏட்டுச்சுவடிகளில் (2) கற்பலகைகளில்
   (3) கற்குகை நீர்வடி விளிம்புகளில் (4) தங்க, செப்பேடுகளில்

3. தனது அனுபவத்திலிருந்து கண்டி இராச்சியம் தொடர்பான தகவல்களைக் கொண்ட நூலொன்றை எழுதியவர்
   (1) பல்டியஸ் (2) ரிபெய்ரோ
   (3) றொபட் நொக்ஸ் (4) குவேரோஸ் அடிகளார்

4. பௌர்ணமி தினங்களில் வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்குத் தண்டப்பணம் அறவிட்டமை பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெறும் மூலாதாரம் மேல்வருவனவற்றுள் எது ?
   (1) மிகிந்தலை துண்டுக் கல்வெட்டு (2) வேவல்கெட்டிய கல்வெட்டு
   (3) கற்புத்தகக் கல்வெட்டு (4) சொரபொரவாவியின் தூண் கல்வெட்டு

5. பிரஜை ஒருவராக வரலாற்று அறிவை மிக வினைத்திறனாகப் பயன்படுத்த வேண்டியது,
   (1) இலங்கையின் கடந்தகால சிறப்பைக் கற்பதற்காக
   (2) பழமையான தொழினுட்ப அறிவை நவீனமயப்படுத்திப் பயன்படுத்துவதற்காக
   (3) கடந்த காலங்களில் செய்யப்பட்ட தவறுகளை மீண்டும் செய்யாதிருப்பதற்காக
   (4) கடந்த காலத்தைக் கொண்டு நிகழ்காலத்தை விளங்கிக் கொண்டு எதிர்காலத்தை வடிவமைத்துக் கொள்வதற்காக

6. இலங்கையின் தேசிய மரபுரீதியான தொல்பொருட்களை மேல்வருவனவற்றுள் எந்தக் காரணத்திற்காகப் பாதுகாக்க வேண்டும் ?
   (1) எதிர்கால சந்ததியினருக்குக் காட்ட வேண்டுமென்பதனால்
   (2) இலங்கையின் தனித்துவத்தை எடுத்துக்காட்டக் காரணமாக அமைந்துள்ளதனால்
   (3) சுற்றுலாத் துறையின் முன்னேற்றத்திற்குக் காரணமாக அமைவதனால்
   (4) கடந்தகால ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனால்

7. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரிய கற்சாதனங்கள் கிடைக்கப் பெற்றுள்ள பத்திராஜவலை பிரதேசத்தின் இரணைமடு படிவுக்குரிய கற்காலச் சரளைக்கற்படிவு, கால அளவீட்டிற்கமைய
   (1) ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் ஆண்டுகள் பழமையானதாகும்.
   (2) எண்பதாயிரம் ஆண்டுகள் பழமையானதாகும்.
   (3) முப்பத்தெண்ணாயிரம் ஆண்டுகள் பழமையானதாகும்.
   (4) இருபத்தெண்ணாயிரம் ஆண்டுகள் பழமையானதாகும்.

8. இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதனின் வாழ்க்கை முறை பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள உதவும் பெரும்பாலான சான்றுகள் கிடைக்கப்பெற்ற இடமாகக் கருதப்படுவது,
   (1) ரிற்றிகல (2) கந்தரோடை (கதுருகொட)
   (3) பாகியன்கல (4) கதிர்காமம்

9. இலங்கையின் இரும்பு பயன்பாடு தொடர்பான தெளிவான தொல்பொருளியற் சான்றுகள் முதன்முதலில் கிடைக்கப் பெற்றது,
   (1) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலாகும். (2) முன் வரலாற்றுக் காலத்திலாகும்.
   (3) ஆரம்ப வரலாற்றுக் காலத்திலாகும். (4) வரலாற்றுக் காலத்திலாகும்.

10. வேட்டையாடுதலின் மூலம் வாழ்ந்த வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன், விவசாயத்தில் ஈடுபடுவதற்குக் காரணமாக அமைந்த அடிப்படை சுற்றாடற் காரணி மேல்வருவனவற்றுள் யாது ?
    (1) மண்ணின் வளமான தன்மை அதிகரித்தமை
    (2) வேட்டையாடுதலுக்குப் பொருத்தமான விலங்குகளின் தட்டுப்பாடு
    (3) குளிர்க் காலநிலை மாற்றமுற்று வெப்பக் காலநிலை ஆரம்பித்தமை
    (4) மக்கள் தொகை அதிகரிப்பும் பரவலும்

11. ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் இலங்கையில் குடியிருப்புகளின் பரவல் தொடர்பானதொரு விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முக்கியமானதாய் அமையும் காரணி மேல்வருவனவற்றுள் எது ?
    (1) கிராமியக் குளங்களின் விஸ்தரிப்பு (2) குகைகளின் அமைவு
    (3) செங்கபில மண்ணின் பரவல் (4) சமதரைகளின் விஸ்தரிப்பு

PAST PAPERS WIKI

**12.** பருமகர்களுக்கு அரசாங்கத்தில் உயர் பதவிகளை வழங்கி அரசியல் அதிகாரத்தை மையப்படுத்தும் செயன்முறையைத் தொடக்கிய அரசன்

(1) பண்டுகாபயன் (2) தேவநம்பியதீசன் (3) துட்டகைமுனு (4) வசபன்

**13.** புராதன இலங்கையில் முன்னேற்றகரமான மருத்துவத் தொழினுட்பம் காணப்பட்டமைக்கான முக்கிய சான்றாக அமைவது

(1) பழமையான வைத்திய நூல்கள் இலங்கையில் பயன்பாட்டிலுள்ளமை
(2) தொல்பொருள் ஆய்வுகளில் சத்திரசிகிச்சையுடன் தொடர்புடைய உபகரணங்கள் கண்டெடுக்கப்பட்டமை
(3) மருத்துவர்களாகப் பிரபல்யமடைந்த அரசர்கள் தொடர்பாக வரலாற்று நூல்களிற் குறிப்பிடப்பட்டிருக்கின்றமை
(4) கடந்தகால வைத்தியசாலைக் கட்டங்களின் இடிபாடுகள் கிடைக்கப் பெற்றமை

**14.** பல இடங்களில் அணைக்கட்டுகளை அமைத்து நீண்ட தூரத்துக்குக் கால்வாய் மூலமாக நீரைக் கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட நதி மேல்வருவனவற்றுள் எது ?

(1) மல்வத்து ஓயா (2) கலா ஓயா (3) யான் ஓயா (4) மகாவலி கங்கை

**15.** இலங்கையை மூன்று முறை ஆட்சிசெய்ததாக வரலாற்றிலே குறிப்பிடப்பட்டுள்ள அரசி மேல்வருவோருள் யார் ?

(1) லீலாவதி (2) கல்யாணவதி (3) சுகலா (4) சூலசீவலி

**16.** கீர்த்தி ஸ்ரீ நிசங்கமல்ல மன்னன் தனது பல்வேறு கல்வெட்டுகளிற் பயன்படுத்திய அரச கோட்பாடு தொடர்பான எண்ணக்கரு மேல்வருவனவற்றுள் எது ?

(1) தேவ எண்ணக்கரு (2) போதிசத்துவ எண்ணக்கரு
(3) பர்வதராஜ எண்ணக்கரு (4) சக்கரவர்த்தி எண்ணக்கரு

**17.** பழங்காலத்தில் ‘கவு’ எனும் அளவீட்டுமுறை பயன்படுத்தப்பட்டது

(1) காலத்தை அளப்பதற்கு (2) தூரத்தை அளப்பதற்கு
(3) நிறையை அளப்பதற்கு (4) பரப்பை அளப்பதற்கு

**18.** கல்வெட்டு மூலாதாரங்களில் ‘தகபதி’ எனக் குறிப்பிடப்படுவது

(1) நீர் வரியாகும். (2) தானிய வரியாகும். (3) மீன் வரியாகும். (4) துறைமுக வரியாகும்.

**19.** மேல்வரும் கூற்றுகளைக் கருதுக.

- நகராக்கத் திட்ட வரைபடங்கள் கேத்திரகணிதப் பொறிமுறைத் தன்மையிலிருந்து மீண்டு சுதந்திரத் தன்மைக்கு மாற்றமுறல்
- நகரங்கள் அளவில் மிகப் பெரிதானதாகக் காட்டப்படாமை

மேற்படி கூற்றுகளுடன் தொடர்புடைய நகரங்களின் சோடி இவற்றுள் எது ?

(1) அனுராதபுரமும் பொலன்னறுவையும் (2) அனுராதபுரமும் தம்பதெனியாவும்
(3) தம்பதெனியாவும் யாப்பகூவவும் (4) பொலன்னறுவையும் குருணாகலையும்

**20.** மேல்வரும் வரலாற்று நிகழ்வுகளைக் கருதுக.

A – ஐந்நூற்று ஐம்பது ஜாதகக் கதை நூல் சிங்களத்துக்கு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டமை
B – கண்டிய பிரதேச ஆட்சியாளனான ‘ஜோதிய’ என்பவன் கிளர்ச்சியை ஏற்படுத்தியமை
C – சந்திரபானு இலங்கை மீது படையெடுத்தமை
D – இபுன் பதூதா என்ற அராபியப் பிரயாணி இலங்கைக்கு வருகை தந்தமை

மேற்குறித்த வரலாற்று நிகழ்வுகளை அவை இடம்பெற்ற கால ஒழுங்கில் கொண்டுள்ள சரியான விடை யாது ?

(1) A, C, B, D (2) C, A, D, B (3) C, D, A, B (4) D, C, A, B

**21.** கண்டி இராசதானி தொடர்பான மேல்வரும் கூற்றுகளுள் **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.

(1) நாட்டின் உயர் ஆட்சியதிகாரமும் நீதித்துறை அதிகாரமும் அரசனிடம் காணப்பட்டது.
(2) மரபுகள், முன்னைய பழக்கவழக்கங்களுக்கமைய ஆட்சி நடவடிக்கைகள் இடம்பெற்றன.
(3) சமூகத் தொடர்புகளும் திருமணங்களும் சாதிமுறையினடிப்படையில் இடம்பெற்றன.
(4) நாட்டின் அனைத்து பிரஜைகளும் சட்டத்தின் முன் சமமானவர்களாகக் கருதப்பட்டனர்.

**22.** போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தவர் யார் ?

(1) சங்கிலியன் (2) பரராஜசேகரம் (3) புவிராஜபண்டாரம் (4) எதிரிமன்னசிங்கம்

PAST PAPERS WIKI

● மேல்வரும் அட்டவணையில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு **23** ஆம், **24** ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

| அரசன் | இடம் | இராணுவ அதிகாரி |
|---|---|---|
| A - முதலாம் விமலதர்மசூரியன் | D - ரந்தெனிவலை | G - தியோகு த மேலோ |
| B - முதலாம் இராஜசிங்கன் | E - தந்துரே | H - கொன்ஸ்தாந்தினு த சா |
| C - இரண்டாம் இராஜசிங்கன் | F - முல்லேரியா | J - பேரோ லோபேஸ் த சூசா |

**23.** ரந்தெனிவலைப் போருடன் தொடர்புடைய கண்டிய அரசனும் போர்த்துக்கேய இராணுவ அதிகாரியும் குறிப்பிடப்பட்டுள்ள விடை எது ?
(1) A, G (2) B, H (3) C, H (4) C, J

**24.** முதலாம் விமலதர்மசூரியன் போர்த்துக்கேயருடன் போரிட்ட இடத்தையும் அதன்போது போர்த்துக்கேய இராணுவத்தை வழிநடத்திய இராணுவ அதிகாரியையும் குறிப்பிடும் விடை எது ?
(1) D, G (2) E, H (3) E, J (4) F, G

**25.** அரசனுக்கு மகன்மார் இல்லாதபோது அரசியின் சகோதரனுக்கு அரசுரிமையை வழங்கும் மரபினைக் கடைப்பிடித்தோர் மேல்வரும் எப்பரம்பரையைச் சேர்ந்த ஆட்சியாளர்களாவர் ?
(1) மௌரியர் (2) இலம்பகர்ணர் (3) காலிங்கர் (4) நாயக்கர்

**26.** ஒல்லாந்தர் கண்டிய அரசர்களுடனான செயற்பாடுகளின்போது பெரும்பாலும் மோதல்களை ஏற்படுத்திக் கொள்வதனைத் தவிர்த்துக்கொண்டமைக்குப் பிரதான காரணம் மேல்வருவனவற்றுள் எது ?
(1) கண்டிய அரசர்களைப் பகைத்துக் கொள்வது தமது வர்த்தக நடவடிக்கைகளுக்குத் தடையாக அமையலாம் என்பது
(2) கண்டிய மன்னர்களின் போர்ப் பலத்துடன் ஒப்பிடுகையில் ஒல்லாந்தர்களின் இராணுவ பலம் பலவீனமானதாகக் காணப்பட்டமை
(3) செலவுகளைக் குறைத்துக் கொள்ளல் ஒல்லாந்தர்களின் கொள்கைகளின் அடிப்படைப் பண்பாகக் காணப்பட்டமை
(4) கண்டிக்கு இராணுவத்தை அனுப்பும்போது பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டமை

● கீழே A தொடக்கம் E வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு **27** ஆம், **28** ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A – சர்வஜன வாக்குரிமை
B – தேசிய அரசுக் கழகம்
C – பொதுசன வாக்கெடுப்பு
D – செனட் சபை
E – விகிதாசார பிரதிநிதித்துவ முறை

**27.** டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம், சோல்பரி அரசியல் யாப்புச் சீர்திருத்தம் ஆகியவற்றுடன் தொடர்புடைய தகவல்களை ஒழுங்குமுறையில் உள்ளடக்கிய விடை யாது ?
(1) A, B (2) A, D (3) B, D (4) C, E

**28.** 1978 அரசியல் யாப்பில் அடங்கியுள்ள விடயங்களை உள்ளடக்கிய விடை யாது ?
(1) B, C (2) B, D (3) C, D (4) C, E

**29.** ஆங்கிலேயர்கள் கண்டியைக் கைப்பற்றுவதற்காக தந்திரோபாயமாகச் செயற்பட்டதன் மூலம் பங்களிப்பு வழங்கியதாகக் கருதப்படுபவர்
(1) மேஜர் ஹுக் (2) எஹெலபொல அதிகாரம்
(3) ஜோன் டொய்லி (4) றொபட் பிரவுண்ரிக்

**30.** இலங்கையில் தோற்றம் பெற்ற பழமையான அரசியற் கட்சி
(1) லங்கா சமசமாஜக் கட்சி (2) ஐக்கிய தேசிய கட்சி
(3) இலங்கை கம்யூனிஸ்ற் கட்சி (4) ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி

**31.** இலங்கையில் அமைந்துள்ள சில விவசாயக் குடியேற்றங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – கல்லோயா
B – மின்னேரியா
C – கந்தளாய்
D – மினிப்பே
E – கிரிதலே

மேற்குறித்த விவசாயக் குடியேற்றங்களுள் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டவற்றைக் குறிப்பிடும் விடை எது ?
(1) A, E (2) B, C (3) B, D (4) C, D

PAST PAPERS WIKI

**32.** ஹென்ரி ஸ்டீல் ஓல்கொற், அணகாரிக தர்மபால, ஆறுமுகநாவலர், சித்திலெப்பை ஆகியோரின் செயற்பாடுகளின் பொதுப் பண்பு
(1) சமய, கல்வி மறுமலர்ச்சிக்குத் தலைமை தாங்கியமை
(2) இலங்கையின் கடந்தகாலச் சிறப்புகளை உலகிற்கு எடுத்துக்காட்டியமை
(3) மதுவிலக்கு இயக்கத்துக்குத் தலைமை தாங்கியமை
(4) அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைக் கோரி போராட்டங்களை நடத்தியமை

**33.** மத்திய காலத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி காரணமாக பல்வேறு துறைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. மேல்வருவனவற்றுள் எத்துறையில் லியனாடோ டாவின்சி பிரசித்தி பெற்றார் ?
(1) மருத்துவ விஞ்ஞானம் (2) ஓவியக் கலை (3) நாடுகாண் பயணங்கள் (4) இலக்கியம்

**34.** பல்வேறு கண்டுபிடிப்புகளைச் செய்த சிலரின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - சாமுவேல் மோர்ஸ்
B - றொபட் புல்டன்
C - ஹம்ப்ரி டேவி
D - குக்லி மார்க்கோனி
E - ஜோன் மெக்கடம்
மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுள் கைத்தொழிற் புரட்சியின்போது தொடர்பாடல் துறையுடன் தொடர்புடைய கண்டுபிடிப்புகளைச் செய்தோரைக் காட்டும் விடை
(1) A, C (2) A, D (3) B, E (4) C, E

**35.** கைத்தொழிற் புரட்சியின் காரணமாக முன்னேற்றமடைந்த சமூக விளைவைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) பொருட்களையும் சேவைகளையும் இலாபகரமாகவும் விரைவாகவும் அதிக அளவிலும் வழங்க முடிந்தமை
(2) பல்தேசிய வணிகங்கள் முன்னேற்றமடையத் தொடங்கியமை
(3) நகரமயமாக்கலின் முன்னேற்றம் விரைவுபடுத்தப்பட்டமை
(4) நிதி, வங்கிச் சேவைகள் பரவலடையத் தொடங்கியமை

- கீழே A, B, C, D ஆகியவற்றினால் தரப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு **36** தொடக்கம் **38** வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

A – 1. போர் முரண்பாடுகள்
2. சூழல் மாசடைதல்

B – 1. நாசிசவாதம்
2. ஹிட்லர்

C – 1. மார்ஷல் திட்டம்
2. ஐக்கிய அமெரிக்கக் குடியரசு

D – 1. முதலாம் உலக மகாயுத்தம்
2. ஐக்கிய நாடுகள் சபை

**36.** முதலாவதன் விருத்தி இரண்டாவதின் அதிகரிப்புக்குக் காரணமானதெனக் காட்டும் விடயச்சோடி யாது ?
(1) A (2) B (3) C (4) D

**37.** முதலாவதன் விருத்தியுடன் இரண்டாவது பலமடைவதனைக் காட்டும் விடயச்சோடி எது ?
(1) A (2) B (3) C (4) D

**38.** முதலாவதற்கும் இரண்டாவதற்கும் இடையில் எதுவித தொடர்பையும் **காட்டாத** விடயச்சோடி எது ?
(1) A (2) B (3) C (4) D

**39.** இரண்டாம் உலக மகாயுத்தக் காலத்தில் கொழும்பு, திருகோணமலை ஆகிய நகரங்களின் மீது விமானத் தாக்குதல் நடத்திய நாடு எது ?
(1) ஐக்கிய அமெரிக்கக் குடியரசு (2) ஜேர்மனி
(3) ஜப்பான் (4) இத்தாலி

**40.** கூட்டுச்சேரா (அணிசேரா) நாடுகளின் அமைப்பு நிறுவப்படுவதற்குத் தலைமையேற்றுச் செயற்பட்ட தெற்காசிய அரச தலைவர் மேல்வருவோருள் யார் ?
(1) மார்ஷல் டிட்டோ (2) ஜவஹர்லால் நேரு (3) அப்துல் கமால் நசார் (4) லீ குவாங் யு

PAST PAPERS WIKI

2.1.3 வினாத்தாள் I இற்கான எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

| வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|
| 01. | 02 | 21. | 04 |
| 02. | 01 | 22. | 02 |
| 03. | 03 | 23. | 03 |
| 04. | 04 | 24. | 03 |
| 05. | 04 | 25. | 04 |
| 06. | 02 | 26. | 03 |
| 07. | 01 | 27. | 02 |
| 08. | 03 | 28. | 04 |
| 09. | 02 | 29. | 03 |
| 10. | 03 | 30. | 01 |
| 11. | 01 | 31. | 03 |
| 12. | 03 | 32. | 01 |
| 13. | 02 | 33. | 02 |
| 14. | 04 | 34. | 02 |
| 15. | 01 | 35. | 03 |
| 16. | 04 | 36. | 01 |
| 17. | 02 | 37. | 02 |
| 18. | 01 | 38. | 04 |
| 19. | 03 | 39. | 03 |
| 20. | 02 | 40. | 02 |

அட்டவணை 05

ஒரு விடைக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தமாக 80 புள்ளிகள்

வினாத்தாள் I இற்கான இறுதிப் புள்ளிகள் $= \frac{80}{2} = 40$

PAST PAPERS WIKI

2.1.4 வினாத்தாள் I இற்கு விடையளித்த விதம் பற்றிய அவதானிப்பு (பாடப்பரப்புக்கேற்ப)



| பாடப்பரப்பு | வினாக்களின் எண்ணிக்கை | இலகுத்தன்மை கூடிய வினா இலக்கமும் அதன் இலகுத்தன்மையும் | இலகுத்தன்மை குறைந்த வினா இலக்கமும் அதன் இலகுத்தன்மையும் |
|---|---|---|---|
| இலங்கை வரலாறு | 32 | 8 - 91% | 26 - 11% |
| உலக வரலாறு | 08 | 33 - 92% | 38 - 51% |




2016 ஆம் ஆண்டு வரலாறு வினாத்தாள் I இல் இலங்கை வரலாறு தொடர்பாக 32 வினாக்களும், உலக வரலாறு தொடர்பாக 08 வினாக்களும் உள்ளடங்கியுள்ளன. இலங்கை வரலாற்றின் மொத்த இலகுதன்மை 61.34% ஆகும். உலக வாரலாற்றின் மொத்த இலகுதன்மை 67% ஆகும்.

இலங்கை வரலாற்றில் மொத்த இலகுதன்மையில் தரம் 6 - 11 வரை சித்திரம், வரலாறு, புவியியல், குடியுரிமைக் கல்வி போன்று பாடநூல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தாக்கம் செலுத்தியுள்ளன. பாட அறிவினை அடிப்படையாகக் கொண்ட வினாக்களின் இலகுதன்மை உயர் மட்டத்தில் உள்ளது. இலங்கையின் அமைவிடம், வரலாற்றுக்கு முற்பட்ட காலம், முன் வரலாற்றுக் காலம், வரலாற்று இடங்கள், அதனுடன் தொடர்புடைய தகவல்கள், (கல்வெட்டு, மயானங்கள், மரபுரிமை, பண்டைய தொழினுட்பம், அளவு முறைகள்) தேசிய இயக்கங்கள், அரசியல் யாப்புகள், பேரரசு நிர்வாகம் முதலான தலைப்பில் விடய அறிவை அடிப்படையாகக் கொண்டு வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

உலக வரலாறு தொடர்பான வினாக்களின் மொத்த இலகுதன்மை 67% ஆகும். மறுமலர்ச்சி, கைத்தொழிற் புரட்சி, உலக யுத்தம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. கனிஷ்ட இடைநிலைத் தரங்களில் வரலாறு பாடத்தில் மேற்கூறப்பட்ட தலைப்புகளின்அடிப்படையில் பெறப்பட்ட அறிவு பகுதி I உலக வரலாறு தொடர்பாகக் கூடிய இலகுதன்மையைப் பெறுவதற்கு வழிவகுத்துள்ளது.

PAST PAPERS WIKI

2.1.5 வினாத்தாள் I இல் ஒவ்வொரு வினாவுக்குமுரிய விடைத் தெரிவுக்கான துலங்கலை வழங்குவதில் மாணவர் சதவீதம்

| வினா இலக்கம் | சரியான தெரிவு | ஒவ்வொரு தெரிவும் செய்யப்பட்ட மாணவர் சதவீதம் | | | | விடையளிக்கவில்லை |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | |
| 1 | 02 | 11.6% | **79.6%** | 5.1% | 3.5% | - |
| 2 | 01 | **80.6%** | 11.4% | 2.7% | 5.2% | - |
| 3 | 03 | 3.9% | 10.9% | **77.4%** | 7.7% | - |
| 4 | 04 | 14.6% | 12.5% | 9.7% | **63.0%** | - |
| 5 | 04 | 5.8% | 6.5% | 2.1% | **85.1%** | - |
| 6 | 02 | 19.6% | **61.0%** | 2.4% | 16.7% | - |
| 7 | 01 | **55.9%** | 17.4% | 14.6% | 11.7% | - |
| 8 | 03 | 3.6% | 3.5% | **91.0%** | 1.8% | - |
| 9 | 02 | 9.9% | **71.7%** | 12.7% | 5.4% | - |
| 10 | 03 | 17.6% | 15.2% | **28.1%** | 38.7% | - |
| 11 | 01 | **63.2%** | 20.4% | 9.2% | 7.0% | - |
| 12 | 03 | 23.6% | 10.0% | **46.4%** | 19.5% | - |
| 13 | 02 | 5.4% | **77.1%** | 7.0% | 10.3% | - |
| 14 | 04 | 10.3% | 7.6% | 6.6% | **75.2%** | - |
| 15 | 01 | **74.50%** | 6.8% | 12.8% | 5.7% | - |
| 16 | 04 | 7.1% | 10.8% | 9.3% | **72.6%** | - |
| 17 | 02 | 5.9% | **86.7%** | 3.1% | 4.3% | - |
| 18 | 01 | **46.2%** | 19.6% | 16.0% | 17.9% | - |
| 19 | 03 | 22.9% | 17.4% | **46.1%** | 13.2% | - |
| 20 | 02 | 19.6% | **38.9%** | 23.7% | 17.5% | - |
| 21 | 04 | 14.4% | 20.0% | 20.4% | **45.0%** | - |
| 22 | 02 | 27.9% | **59.5%** | 5.1% | 7.2% | - |
| 23 | 03 | 11.5% | 21.6% | **52.3%** | 14.3% | - |
| 24 | 03 | 9.6% | 19.0% | **59.4%** | 11.7% | - |
| 25 | 04 | 3.0% | 10.9% | 12.8% | **72.9%** | - |
| 26 | 03 | 62.3% | 14.9% | **10.8%** | 11.6% | - |
| 27 | 02 | 27.6% | **49.3%** | 13.6% | 9.2% | - |
| 28 | 04 | 17.9% | 13.0% | 16.0% | **52.7%** | - |
| 29 | 03 | 2.8% | 16.0% | **69.4%** | 11.5% | - |
| 30 | 01 | **50.7%** | 28.8% | 10.7% | 9.5% | - |
| 31 | 03 | 20.2% | 31.4% | **37.1%** | 10.9% | - |
| 32 | 01 | **82.7%** | 5.0% | 10.4% | 1.8% | - |
| 33 | 02 | 2.0% | **92.3%** | 4.6% | 1.1% | - |
| 34 | 02 | 5.5% | **81.1%** | 8.1% | 5.2% | - |
| 35 | 03 | 20.1% | 9.4% | **56.3%** | 13.9% | - |
| 36 | 01 | **79.1%** | 7.3% | 6.2% | 7.2% | - |
| 37 | 02 | 4.6% | **59.6%** | 20.2% | 15.4% | - |
| 38 | 04 | 6.8% | 11.6% | 30.8% | **50.6%** | - |
| 39 | 03 | 12.2% | 24.0% | **57.1%** | 6.2% | 1% |
| 40 | 02 | 12.4% | **60.4%** | 18.3% | 8.5% | - |

PAST PAPERS WIKI

**அட்டவணை 06**

ஒவ்வொரு வினாவிற்கும் சரியான விடையைத் தெரிவு செய்த மாணவர் சதவீதம் நிழற்றிக் காட்டப்பட்டுள்ளது.

### 2.1.6. வினாத்தாள் I இற்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்பும் முடிவும் ஆலோசனைகளும் :

2016 ஆம் ஆண்டு வினாத்தாள் I இனைத் தயாரிக்கும்போது இலங்கை வரலாற்று பகுதிக்கு 32 வினாக்களும் (80%) உலக வரலாற்றுப் பகுதிக்கு 08 வினாக்களும் (20%) உள்ளடக்கப்பட்டன.

வினாத்தாள் I இல் இலகுதன்மை 60% இலும் கூடிய வினாக்கள் 20 ஆகும். அவற்றினுள் இலங்கை வரலாற்றுப் பகுதியில் 1, 2, 3, 4, 5, 6, 8, 9, 11, 13, 14, 15, 16, 17, 25, 29, 32 ஆகிய வினாக்கள் அடங்குவதுடன் உலக வரலாற்றுப் பகுதியில் 03 வினாக்கள் அடங்கியுள்ளன. அவை வினா 33, 34, 36 என்பனவாகும்.

இவ்வினாத்தாளில் 80% இலும் கூடிய இலகுதன்மை கொண்ட வினாக்கள் 2, 5, 8, 17, 32, 33, 34 ஆகியனவாகும். அவற்றின் இலகுதன்மை முறையே 80.67%, 85.13%, 91.00%, 82.70%, 86.70%, 92.27%, 81.13% ஆகும். இவ்வினாக்கள் அனைத்தும் அறிவு அடிப்படையிலான மதிப்பீட்டிற்கு உட்பட்டமையால் இலகுதன்மையில் செல்வாக்கு செலுத்தியுள்ளது எனலாம்.

வினாத்தாள் I இல் ஒட்டுமொத்த இலகுதன்மை 30% இற்கு குறைவாக இலங்கை வரலாற்றுப் பகுதியில் காணப்பட்டது. இல 10, 26 என்பனவாகும். அவற்றின் இலகுதன்மை முறையே 28.13%, 10.80% ஆகும். இவ்வினாக்கள் நன்கு விடைகளைத் தெரிந்தெடுக்கும் வகையானவை. இவற்றின் தெரிவுகள் தர்க்க ரீதியான அறிவினால் தெரிவுசெய்யப்பட வேண்டியதால் இலகுதன்மை குறைவடையக் காரணமாகும்.

வினாத்தாள் I இல் உலக வரலாற்றுப் பகுதியில் எல்லா வினாக்களினதும் இலகுதன்மை 50% இற்கு கூடுதலாக உள்ளது. வினா இலக்கம் 33 இலகுதன்மை கூடுதலாக உள்ளதுடன் அது 92.27% ஆகும். கீழ் வகுப்புகளிலும் மற்றைய பாடங்களிலும் பெற்ற அறிவு இத்தகைய இலகுதன்மையை பெறக் காரணமானது எனலாம்.

வினாத்தாள் I இல் உயர் அடைவு மட்டத்தை பெறுவதற்கு வகுப்பறையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அப்பால் பாடத்தோடு தொடர்புடைய தனிநபர்களின் படங்கள், அவர்களின் ஆக்கங்கள் பற்றிய படங்கள் அடங்கிய களப்புத்தகங்களைத் தயாரிக்க மாணவர்களை ஈடுபடுத்தல், பரிசுகள் வழங்குதல் மூலம் அவர்களை ஊக்குவித்தல், பாத்திரமேற்று நடித்தல் தொலைக்காட்சி வேலைத்திட்டங்கள் (knowlegde TV) இணையத்தள வசதிகளினூடாக பாடம் தொடர்பான அறிவை வளர்த்துக்கொள்ள மாணவர்களை ஈடுபடுத்தல் ஆகியனவற்றை நடைமுறைப்படுத்த ஆலோசனைகள் வழங்க முடியும்.

இலங்கை பற்றியும் ஐரோப்பா ஆசியா அமெரிக்கா ஆகிய நாடுகள் பற்றியும் மாணவர்களிடையே காணப்படும் அறிவை வளர்ப்பதற்கும் மேற்குறிப்பிட்ட வேலைத்திட்டங்களை பயன்படுத்தல் பொருத்தமானதாகும்.

மாநாடுகள் நடத்துதல், முன்பயிற்சி வினாத்தாள்களுக்கு விடை எழுதுதல், பாட விடயங்களை மனதில் நிலைநிறுத்துவதற்கான பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்தல், வினாக்களைத் தவறின்றி தெளிவாக விளங்கிகொள்ளப் பயிற்சியளித்தல், முதலிய செயற்பாடுகள் மூலம் உயர் அடைவு மட்டத்தை மாணவர் அடைவதற்கு வழிப்படுத்த முடியும்.

PAST PAPERS WIKI

## 2.2 வினாத்தாள் II இற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள்

### 2.2.1 வினாத்தாள் II - கட்டமைப்பு

**வினாத்தாள் I -** நேரம் 01மணித்தியாலம், மொத்தப் புள்ளிகள் 80

**40** பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடை எழுத வேண்டும். **தரம் 10 இல் 50% உம், தரம் 11 இல் 50% மும்** உள்ளடங்குமாறு வினாக்கள் தயாரிக்கப்படுவதுடன், அதில் **80% இலங்கை வரலாறு** தொடர்பான தேர்ச்சி மட்டத்திற்கும், **20% உலக வரலாறு** தொடர்பான தேர்ச்சி மட்டத்திற்கும் ஒதுக்கப்படும். ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 80 புள்ளிகள்.

**வினாத்தாள் II -** நேரம் 03மணித்தியாலம், மொத்தப் புள்ளிகள் 120

இது I, II, III ஆகிய முக்கிய மூன்று பகுதிகளைக் கொண்டது.

பகுதி I

முதலாம் வினா கட்டாயமானது. அது (அ), (ஆ) ஆகிய இரு பகுதிகளைக் கொண்டது.

பகுதி (அ) - இடங்களைக் குறித்துப் பெயரிடுதல் - 18 புள்ளிகள்

பகுதி (ஆ) - படங்கள் தொடர்பான / வரலாற்று நிகழ்வுகள் தொடர்பான மூன்று பகுதிகளையுடையது.

12 புள்ளிகள் $4 \times 3 = 12$ புள்ளிகள்

பகுதி II

கட்டமைப்பு, பகுதிக் கட்டமைப்பு, கட்டுரை வகையிலான 6 வினாக்களைக் கொண்டது. இவற்றில் 4 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். இந்த 6 வினாக்களும் தேர்ச்சி மட்டத்திற்கு அமைய ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பின்வரும் பாட அலகுகளிலிருந்து தயாரிக்கப்படும்.

**தரம் 10 - 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 10**

**தரம் 11 - 2, 3, 4, 5, 6** $18 \times 4 = 72$ புள்ளிகள்

பகுதி III

கட்டமைப்பு, பகுதிக் கட்டமைப்பு, கட்டுரை வகையிலான 2 வினாக்களைக் கொண்டதாகும். இவற்றில் ஒரு வினாவுக்கு விடையளித்தல் வேண்டும். இந்த இரண்டு வினாக்களும் தேர்ச்சி மட்டத்திற்கு அமைய, ஒதுக்கப்பட்ட பாடவேளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பாட அலகுகளிலிருந்து தயாரிக்கப்படும்.

**தரம் 10 - 9**

**தரம் 11 - 1, 7, 8** $18 \times 1 = 18$ புள்ளிகள்

**இறுதிப் புள்ளியைக் கணித்தல் :**

| | |
|---|---|
| வினாத்தாள் I | = 80 |
| வினாத்தாள் II | = 120 |
| இறுதிப் புள்ளி | $= 200 \div 2 = \underline{\underline{100}}$ |

PAST PAPERS WIKI

2.2.2 வினாத்தாள் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும், முடிவுகளும், ஆலோசனைகளும் :

| |
|---|
| வினாத்தாள் II இற்கு விடையளித்தமை தொடர்பான அவதானிப்பு வரைபு 2, 3, 4.1, 4.2, 4.3 என்ற முறையில் முன்வைக்கப்பட்டுள்ளது. வினாவுக்குரிய வரைபு, உரிய வினாக்களின் அவதானிப்பு, முடிவுகள் என்பவற்றுடன் காட்டப்பட்டுள்ளது. |

## பகுதி I

வினா இலக்கம் 1

1. (அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள **எல்லா** வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள **எல்லா** வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) தெதுறு ஓயா, கல் ஓயா, இலங்கைத்துறை, சிலாபம், கதிர்காமம், செங்கடகல, பூந்தல, இப்பன்கட்டுவ, யோத வாவி, நல்லூர், கலாவாவி, ஊராத்தோட்டை (12 புள்ளிகள்)

(ii) சென்னை (மதராஸ்), பாரசீக விரிகுடா, ஜாவா தீவு, இத்தாலி, கெலிகட், கொன்ஸ்தாந்திநோபிள் (06 புள்ளிகள்)

(ஆ) (i) மேல்வரும் *A, B, C, D* ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்குமுறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

*A* - இந்தியாவிற் கரையிறங்கி, தான் ஒரு கிறிஸ்தவன் என்றும் வாசனைத்திரவியங்களைத் தேடி வந்ததாகவும் குறிப்பிட்டவர்

*B* - 'திலோக சுந்தரி' என்ற காலிங்க மன்னனின் மகளை மணம்முடித்த பொலன்னறுவையின் அரசன்

*C* - இலங்கையை ஆட்சிசெய்த முதலாவது இலம்பகர்ண அரசன்

*D* - இரண்டாம் உலக மகாயுத்தத்துடன் தொடர்புடைய இத்தாலிய பாசிச ஆட்சியாளர்

(04 புள்ளிகள்)

- *A, B* ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(ii) 1. '*A*' இனால் காட்டப்பட்டுள்ள நிர்மாணிப்பின் பெயர் என்ன ?
2. எந்தத் தூபியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியினால் இது கண்டுபிடிக்கப்பட்டது ?
3. இது எந்த உலோகத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது ?
4. இந்த தொல்பொருள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்திற் பிறந்ததாகக் கருதப்படும் மன்னனின் பெயர் என்ன ?

(04 புள்ளிகள்)



*A*

(iii) 1. '*B*' இனால் காட்டப்பட்டுள்ள கட்டடத்தின் பெயர் என்ன ?
2. இது எந்த சமயத்திற்குரியது ?
3. இது இலங்கையின் எவ்வரலாற்று நகரத்தில் அமைந்துள்ளது ?
4. இது இலங்கையை ஆண்ட எந்த வெளிநாட்டு ஆட்சியாளர்களினால் நிர்மாணிக்கப்பட்டது ?

(04 புள்ளிகள்)



*B*

PAST PAPERS WIKI

திர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

வினா 1

**(1) (அ) (i)**




(10 புள்ளிகள்)

**(1) (அ) (ii)**




(08 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

(ஆ) (i) A - வாஸ்கொடகாமா

B - முதலாம் விஜயபாகு மன்னன் / மகா விஜயபாகு

C - வசபன்

D - பெனிடோ முசோலினி (01 × 04 = 04 புள்ளிகள்)

(ii) 1. - வெண்கல யானை விளக்கு / தெடிகம யானை விளக்கு

2. - சூதிகரதூபி / தெடிகம கொட்ட விகாரை

3. - வெண்கலம்

4. - முதலாம் பராக்கிரமபாகு / மகா பராக்கிரமபாகு (01 × 04 = 04 புள்ளிகள்)

(iii) 1. - சிவன் கோயில்

2. - சிவ / சைவம் / இந்து

3. - பொலன்னறுவை / புலஸ்திநகர்

4. - சோழர் (01 × 04 = 04 புள்ளிகள்)

**1ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**




01 ஆம் வினா கட்டாயமானது. எனினும் இவ்வினாவிற்கு விடையளித்திருப்போர் 99% ஆகும். இந்த வினாவுக்கான புள்ளி 30 ஆகும்.

00 - 07 ஆயிடையில் 26%
08 - 15 ஆயிடையில் 40%
16 - 22 ஆயிடையில் 24%
23 - 30 ஆயிடையில் 10%

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இந்த வினாவுக்கு 23 புள்ளிகளையோ அதற்கு மேற்பட்ட புள்ளிகளையோ பெற்றவர்கள் 10% ஆவர். 07 புள்ளிகளையோ அதற்குக் குறைந்த புள்ளிகளையோ பெற்றுள்ளோர் 26% ஆவர்.




★ இவ்வினா 14 உபபிரிவுகளைக் கொண்டுள்ளது. அவற்றில் 4 உபபிரிவுகள் மாத்திரமே 80% இற்கும் கூடிய இலகுதன்மையைக் காட்டுகின்றது. இவ்வினாவில் கூடிய இலகுதன்மையைக் காட்டுவது (ஆ) பிரிவின் (iii) (2) ஆகும். அதன் இலகுதன்மை 89% ஆகும். குறைந்த இலகுதன்மையைக் காட்டுவது (அ) (i) பிரிவாகும். அதன் இலகுதன்மை 28% ஆகும்.

PAST PAPERS WIKI

முதலாம் வினாவில் (அ) பகுதியில் (i), (ii) முறையே இலங்கைப் படம், உலகப் படம் என்பவற்றில் குறித்துப் பெயரிடுதலாகும். அதன் இலகுதன்மை முறையே 28%, 36% ஆகும். இலங்கையின் வரலாற்று இடங்களைக் குறித்துப் பெயரிடுவதை விட உலகின் வரலாற்று இடங்ளைக் குறித்துப் பெயரிடுதல் இலகுவாக உள்ளது.

முதலாம் வினாவின் (ஆ) (i) பகுதியில் A, B, C, D முறையே வரலாற்று நபர்கள் பற்றியனவாகும். அதன் இலகுதன்மை முறையே 49%, 41%, 60%, 53% ஆகும். குறைந்த இலகுதன்மையைக் காட்டுவது B பகுதியாகும். இது இலங்கையின் அரசியல் பற்றிய தகவல்கள், நபர்களின் பெயர்கள் பற்றியனவாகும். இவ்வினாவின் உபபகுதி C கூடுதலான இலகுதன்மையுடையதாக உள்ளது. ஏனைய தரங்களில் பெற்ற அறிவு இதற்கான காரணமாக இருக்கலாம்.

(ஆ) பகுதியில் (ii), (iii) ஆகிய பகுதிகளில் A, B என்பன படங்கள் தொடர்பான வினாக்களுக்கு விடையளித்தல் ஆகும். படம் A தொடர்பாக பகுதி (ii) வினா 1 இன் இலகுதன்மை 88% ஆகும். பாடநூலில் உள்ள படத்தின் பெயரைக் கேட்டிருப்பதால் இலகுதன்மை உயர் மட்டத்தை அடையக் காரணமாகலாம். ஏனைய பகுதிகளின் இலகுதன்மை முறையே 50%, 56%, 40% ஆக அமைவதற்கு படங்கள் தொடர்பான மேலதிக அறிவு போதுமான அளவு இல்லாமையாகும்.

(ஆ) பகுதியில் (iii) B படத்தினது பெயரைத் திருத்தமாகக் குறிப்பிடுதல் அது தொடர்பான சமயம் பற்றிய அறிவு, அமைந்துள்ள நகரின் பெயர் குறிப்பிடுதல் என்பவற்றுக்கு முறையே 87%, 89%, 81% இலகுதன்மை காணப்படுகின்றது. பகுதி (4) இன் இலகுதன்மை 30% ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவது இதனை நிர்மாணித்த இனத்தவருக்கும் படத்துக்கும் இடையிலான தொடர்பினைக் கற்றிருக்காததின் காரணத்தினாலாகும்.

முழுமையாகப் பார்க்கும்போது முதலாம் வினாவிற்கான அறிவை விருத்தி செய்வதற்கு தொடர்ச்சியாக படங்களில் குறித்துப் பெயரிடுதல் படங்களைக் காட்சிப்படுத்தல் படங்கள் உள்ளடங்கிய சுவர்ப்பத்திரிகைகள் தயாரித்தல் கணினியில் முன்வைக்கும் செயற்பாடு, கல்விச் சுற்றுலா செல்லுதல் ஆகியன பொருத்தமானவையாகும். படங்களில் குறித்துப் பெயரிடும்போது புராதன பெயர்கள் தற்போதைய பெயர்கள் பற்றிய அறிவையும் விருத்தி செய்வது மிக முக்கியமானதாகும்.

PAST PAPERS WIKI

# பகுதி II

**வினா 2**

தேர்ச்சி : இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரிய குடியேற்றங்களின் பரம்பல், அடிப்படை இயல்புகள், வாழ்க்கை முறை, உணவுப் பழக்கம், சடங்கு சம்பிரதாய முறைகள் தொடர்பாக சொல்வர்.

**2.** (i) இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதிக்குரிய மனிதன் வாழ்ந்த சூழலியல் வலயங்கள் **மூன்றினைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன் வாழ்ந்ததாகக் கருதப்படுகின்ற கரையோரத்து திறந்த வாழ்விடங்கள் காணப்பட்ட **இரண்டு** இடங்களையும் கற்குகை வாழ்விடங்கள் காணப்பட்ட இடங்கள் **இரண்டையும்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iii) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதனின் உணவு முறைகள், அவர்கள் வாழ்ந்த பல்வேறு சூழல்களுக்கு அமைய வடிவமைக்கப்பட்டிருந்த விதத்தை **இரண்டு** உதாரணங்களின் துணையுடன் எடுத்துக்காட்டுக. (05 புள்ளிகள்)

(iv) ஆதி வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த ஒருவர் இறந்த பின்னர் பின்பற்றப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படும் மரணச் சடங்கு முறைகளை **இரண்டு** காரணிகளின் துணையுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

**2. (i)**

- ⋆ தாழ்நில அதிவரள் வலயம்
- ⋆ தாழ்நில குறைவரள் வலயம்
- ⋆ தாழ்நில உலர் வலயம்
- ⋆ தாழ்நில இடை உலர் வலயம்
- ⋆ மலை நாட்டு உலர் வலயம்
- ⋆ தாழ்நில இடை ஈரவலயம்
- ⋆ மலை நாட்டு ஈரவலயம்
- ⋆ உயர் மலைநாட்டு ஈரவலயம் (01 × 03 = 03 புள்ளிகள்)

**(ii)**

- கரையோர திறந்த வாழ்விடங்கள்
  - மினிஹாகல்கந்தை
  - பதிராஜவெல
  - பூந்தலை

- கற்குகை வாழிடங்கள்
  - பாகியன்கல
  - பட்டதொம்பலென
  - கிதுல்கலபெலிலென
  - பொத்தானை
  - அலிகல
  - அத்தனகொட அலுலென

(01 × 04 = 04 புள்ளிகள்)

**(iii)**

- தாழ் நிலஉலர் வலயம் - விலங்குகளை வேட்டையாடி உணவைப் பெற்றுக் கொள்ளல்.
- தாழ்நில ஈரவலயம் - காட்டு ஈரப்பலா, கிழங்குவகை, காட்டுவாழை, நத்தைகள்.
- கரையோர வலயம் - உப்பினை பயன்படுத்தியமை, களப்பு நத்தைகள்
- நதிகள், கால்வாய்கள் - நன்னீர் மீன் (02 + 03 = 05 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

(iv) ● பாரிய கற்பாறைகளை ஒன்று சேர்த்து சதுர வடிவில் மயானத்தை அமைத்துக் கொள்ளல்.

● மனித சடலங்கள் எரித்துப் பெறப்பட்ட அஸ்தி (சாம்பல்) மட்பாண்டங்களில் பாதுகாத்து வைக்கப்பட்டன. இது அஸ்தி வைக்கப்பட்ட கல்லறை மயானம் எனவும் அழைக்கப்படும்.

உதாரணம் - இப்பன்கட்டுவை கல்லறை மயானம்
யாப்புஹுவை கல்லறை மயானம்
யட்டிகல் பொத்த கல்லறை மயானம்

● களிமண் பாத்திரங்களில் பாதுகாக்கப்பட்ட அஸ்தி (சாம்பல்) குழி தோண்டிப் புதைக்கப்பட்டிருந்தது. இது அஸ்திக் கலசம் வைக்கப்பட்ட புதைகுழி மயானம் என அழைக்கப்பட்டது.

● களிமண் ஓட மயானம்

பச்சைக் களிமண்ணினால் செய்யப்பட்ட இடம் போன்ற அமைப்பினுள் மனித எலும்புக் கூட்டினைத் தகனம் செய்து அதன் அஸ்தியை களிமண் பாத்திரத்தில் இட்டு அதனுள் வைத்தல்.

உதாரணம் - ஹல்துமுல்ல, பெரகல, உடரஞ்சாமட மயானங்கள்.

**(02 + 04 = 06 புள்ளிகள்)**

**2ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**




02 ஆம் வினாவைத் தெரிவு செய்தோர் 93% ஆகும். இந்த வினாவுக்கான புள்ளிகள் 18 ஆகும்.

00 - 04 ஆயிடையில் 26%
05 - 09 ஆயிடையில் 33%
10 - 13 ஆயிடையில் 23%
14 - 18 ஆயிடையில் 18%
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இந்த வினாவுக்கு 14 அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றோர் 18% ஆவர். 04 அல்லது அதற்குக் குறைந்த புள்ளிகளைப் பெற்றோர் 26% ஆவர்.




இந்த வினாவுக்கான உபபிரிவுகள் 4 ஆகும். அவைகளில் உபபிரிவு *(i)* கூடுதலான இலகுதன்மை கொண்டதாக காணப்படுகின்றது. அது 57% ஆகும். குறைந்த இலகுதன்மையை உபபிரிவு *(iv)* கொண்டுள்ளதுடன் அதன் இலகுதன்மை 40% ஆகும்.

PAST PAPERS WIKI

இலங்கை வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர் வாழ்ந்த சூழலியல் வலயங்களின் இருப்பிடம் சூழலை முகாமைத்துவம் செய்த முறை முன் வரலாற்றுக் காலப்பகுதியில் மரணச்சடங்கு முறைகள் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் பரீட்சிப்பதற்கு இவ்வினா தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வினாவைத் தெரிவு செய்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 93% ஆகும். வினாத்தாளில் பலரின் விருப்பு வினா இதுவாகும்.

இவ்வினாவில் பகுதி *(i)* இன் இலகுதன்மை 57% ஆகும். பாடநூலில் இதற்கான விடை குறிப்பாக இடம்பெற்றிருப்பதால் பரீட்சார்த்திகள் பாடநூலை நன்கு பயன்படுத்தியிருப்பின் உயர் அடைவு மட்டத்தைப் பெறக் கூடியதாக அமைந்திருக்கும்.

இவ்வினாவில் பகுதி *(ii)*, *(iii)* என்பவற்றுக்கு முறையே 56%, 54% இலகுதன்மை காட்டப்பட்டுள்ளது. பகுதி *(ii)* இனுக்கு விடையளிக்கும்போது மாணவர்கள் வினாவின் இரு பகுதிகளுக்கும் விடைகளை மாற்றி எழுதியிருந்தனர். கரையோர திறந்த வாழ்விடங்கள் கற்குகை வாழ்விடங்கள் என்பன அமைந்த இடங்களை மாணவர்கள் சரியாக வேறுபடுத்தி இனம்காண முடியாதிருந்தமையை காணக்கூடியதாயிருந்தது.

இவ்வினாவின் பகுதி *(iv)* இன் இலகுதன்மை 40% இற்கு குறைவாகக் காணப்படுகின்றது. இந்தப் பாடத்திற்கான மூன்று யுகங்களையும் ஒப்பிடக்கூடிய விதத்தில் ஒரு குறிப்பேட்டினைத் தொகுத்து கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின்போது மாணவர்களுக்கு அதினூடாகச் சரியான அறிவினை வழங்க ஆலோசனை வழங்க முடியும்.

**வினா 3**

தேர்ச்சி : அரசுகளுக்கு முற்பட்ட காலத் தலைவர்கள் அழைக்கப்பட்ட முறை, அரசாட்சிக்குப் பின் காணப்பட்ட உத்தியோகத்தர்கள், அரசர்களின் கடமைகள் பற்றி எடுத்துரைப்பர்.

**3.** (i) இலங்கையின் கல்வெட்டுகளிற் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுக்கமைய கீழே *A*, *B*, *C* ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள ஒவ்வொருவரினதும் பதவிப்பெயரை ஒழுங்குமுறையில் எழுதுக.

*A* - குடும்பத் தலைவர்
*B* - கிராமத் தலைவர்
*C* - சில கிராமங்களின் அல்லது குளக்கட்டமைப்பின் தலைவர் (03 புள்ளிகள்)

(ii) மத்திய அரசாங்கத்துடன் தொடர்புடைய மேல்வரும் பணிகளுக்குப் பொறுப்பானவர்களின் பதவிப்பெயர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து *A, B, C, D* ஒழுங்குமுறையில் எழுதுக.

*A* - அமைச்சரவையின் தலைவராகப் பணியாற்றுதல்
*B* - அரச திறைசேரிக்குப் பொறுப்பாக இருத்தல்
*C* - நகர ஆட்சி தொடர்பில் பணியாற்றுதல்
*D* - அரசனின் யானைகள் தொடர்பில் பணியாற்றுதல்

(வெதனா, மஹாமத, படகரிக, சேனபதி, ஹதி அதெக, நகர குத்திக, அச அதெக, பதகு) (04 புள்ளிகள்)

(iii) நாட்டு மக்கள் அரசனிடமிருந்து எதிர்பார்த்த சேவைகள் **இரண்டினை** விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) வசப மன்னன் இந்நாட்டின் முக்கியமான ஆட்சியாளர்களுள் ஒருவர் என்பதை **மூன்று** காரணிகளின் துணையுடன் எடுத்துக்காட்டுக. (06 புள்ளிகள்)

**3. (i)** *A* - குர்கபதி / கஹபதி
*B* - கமிக / கிராமிக / கிராமனி
*C* - பருமக (01 × 03 = 03 புள்ளிகள்)

**(ii)** *A* - மஹாமத *B* - படகரிக
*C* - நகர குத்திக *D* - ஹதி அதெக (01 × 04 = 04 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

**(iii)** ★ நாட்டில் சமாதானத்தையும் பாதுகாப்பையும் நிலைநாட்டல்.
★ நாட்டில் பொருளாதார விருத்தியை ஏற்படுத்தல்.
★ பிரஜைகளிடையே ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்தல்.

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

**(iv)** - இலம்பகர்ண அரசவம்சத்தை ஆரம்பித்தல்.
- முழு இலங்கையையும் ஆட்சிபுரிதல்.
- நீர்ப்பாசன தொழில்நுட்ப நடவடிக்கைகள்
  - பாரிய குளங்களை அமைத்தல்.
  - சுரங்க வழி நீர்ப்பாசன முறையை அமைத்தல்.
  - ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் வரி அறவிட்டமை.
- சமய வளர்ச்சிக்கான நடவடிக்கைகள்
  - விகாரைகளைப் புனரமைத்தல்
  - பராமரிப்பும் புதிதாக அமைத்தலும். **(03 + 03 = 06 புள்ளிகள்)**

**3ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**

**வினாவிற்குப் புள்ளிகள் பெற்ற விதம்**




03 ஆம் வினாவை 93% மாணோர் தெரிவு செய்துள்ளனர். இந்த வினாவுக்கான புள்ளிகள் 18 ஆகும்.

00 - 04 ஆயிடையில் 14%
05 - 09 ஆயிடையில் 31%
10 - 13 ஆயிடையில் 29%
14 - 18 ஆயிடையில் 26%
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இந்த வினாவுக்கு 14 புள்ளிகள் அல்லது அதற்கு மேலான புள்ளிகளைப் பெற்றுள்ளோர் 26% ஆகும். 14% ஆனோர் பெற்ற புள்ளிகள் 04 அல்லது அதற்குக் குறைவானதாகும்.

**வினாவின் உபபிரிவுகளுக்கான இலகுதன்மை**




3ஆம் வினாவின் உபபிரிவுகள்

★ இவ்வினாவின் 9 உபபிரிவுகளில் இலகுதன்மை கூடிய உபபிரிவாக *(ii) C* காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 94% ஆகும். இலகுதன்மை குறைந்த உபபிரிவாக *(iv)* காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 46% ஆகும்.

PAST PAPERS WIKI

கல்வெட்டு மூலாதாரங்களில் குறிப்பிடப்படும் தகவல்களுக்கு அமைய பல்வேறு சமூகப்படித் தரங்களில் தனிநபர்களின் பதவிப் பெயர்களை இனம் காணுதல் அரசனுடைய சேவகர்கள் பற்றிய விளக்கம், வசப மன்னனின் பணிகளை மதிப்பீடு செய்யும் திறன் என்பவற்றை பரீட்சிப்பதற்கு இவ்வினா தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வினாவைத் தெரிவு செய்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 93% ஆகும். இவ்வினாவும் பலரின் விருப்பு வினாவாகும்.

இவ்வினாவில் பகுதி *(i)* இல் *A, B, C* என்னும் மூன்று உபபிரிவுகளும் 75% இற்கும் கூடிய இலகுதன்மையைப் பெற்றுள்ளன. இவற்றில் உபபிரிவு *B* ஆனது 88% கூடுதல் இலகுதன்மையைக் காட்டியுள்ளதுடன் பாட திட்டத்தில் இது தொடர்பான தகவல்கள் அடங்கியிருப்பதுடன் வினாவுக்குரிய விடையை அளிப்பதற்கு அது உதவியுள்ளது எனலாம்.

இவ்வினாவில் பகுதி *(ii)* இன் *A, B,C, D* ஆகிய நான்கு பகுதிகளும் 73% இற்கும் அதற்கும் கூடுதலான இலகுதன்மையை பெற்றிருப்பதுடன் அவை முறையே 73%, 81%, 94%, 77% ஆகும். இவ்வாறு கூடிய இலகுதன்மை பெறுவதற்கு வினாக்களுக்கு உரிய விடைகள் அடைப்புக்குறிக்குள் வழங்கப்பட்டிருந்தமையே காரணமாகும். பரீட்சார்த்திகளுக்கு அடைப்புக்குறிக்குள் சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுவது மட்டுமே செய்யவேண்டியிருந்தது.

இவ்வகையான வினாக்களை வழங்குவதன் மூலம் நீண்ட பாடத்திட்டங்களை நினைவில் வைத்திருக்க வேண்டியதால் ஏற்படும் அசௌகரியம் பெருமளவில் நீக்கப்படுவதுடன் கூடுதல் இலகுதன்மையை பெறுவதற்கும் காரணமாகும் எனலாம்.

இவ்வினாவின் பகுதி *(iii)* இன் இலகுதன்மை 55% ஆகும். பாட நூலில் உள்ள தகவல்களை சேகரித்து தேவையான விடயங்களைத் தொகுத்து முன்வைக்கும் திறனைப் பெற்றிருப்பின் இதனை விடச் சிறப்பான விடையினை எதிர்பார்த்திருக்கலாம்.

இவ்வினாவில் பகுதி *(iv)* இன் இலகுதன்மை 46% ஆகும். இவ்வினாவின் நான்கு பகுதிகளிலே குறைந்த இலகுதன்மையை இப்பகுதியே காட்டியுள்ளது. வசப மன்னன் பற்றி பாடநூலில் பல்வேறு துறைகளில் தகவல்கள் முன்வைக்கப்பட்டமையே குறைவான அடைவு மட்டத்திற்குக் காரணமாகும். இதனை நீக்குவதற்கு பாடநூல் தகவல்களை பல்வேறு துறைகளின் கீழ் முன்வைப்பதற்கு மாணவர்களை ஈடுபடுத்துதல் வேண்டும். பகுதி *(iii), (iv)* தொடர்பான விடயங்களை பகுத்தும் தொகுத்தும் எழுதும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துதல் மிகவும் பொருத்தமானதாகும்.

PAST PAPERS
WIKI

**வினா 4**

தேர்ச்சி : ஆரம்பகாலத்தில் காணப்பட்ட உயரிய நீர்ப்பாசன கட்டமைப்பு, பொலன்னறுவை காலத்துக்குப் பின் நீர்ப்பாசனத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி தொடர்பாக கலந்துரையாடுவர்.

**4.** (i) எலகர கால்வாயின் மூலம் நீர் விநியோகிக்கப்பெறுகின்ற **மூன்று** குளங்களைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) கீழே *A* தொடக்கம் *D* வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுடனும் தொடர்புடைய விடையை ஒழுங்குமுறையில் எழுதுக.

*A* - மகியங்கனைக்குத் தெற்கில் மகாவலி கங்கைக்குக் குறுக்காக அமைக்கப்பட்ட அணைக்கட்டு

*B* - கலா வாவியிலிருந்து திச வாவி வரை நீரைக் கொண்டு செல்வதற்காக நிர்மாணிக்கப்பட்ட கால்வாய்

*C* - "விண்ணிலிருந்து மண்ணில் பொழியும் ஒரு துளி நீரையேனும் மனிதனுக்குப் பயன்படாது கடலில் கலப்பதற்கு இடமளிக்கக் கூடாது" என்ற கருத்தைக் கொண்டிருந்த அரசன்

*D* - மழைநீரினால் போஷிக்கப்படுகின்ற சிறிய குளங்களின் கட்டமைப்புக்கு வழங்கப்படும் பெயர்

(04 புள்ளிகள்)

(iii) (a) குளமொன்றின் முக்கியமான தொழினுட்பக் கூறுகள் **இரண்டைப்** பெயரிடுக.

(b) நீங்கள் மேலே (a) இல் பெயரிட்ட ஒரு தொழினுட்பக் கூறின் நிர்மாணிப்பு, பயன்பாடுகள் என்பன பற்றிச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) பொலன்னறுவை இராச்சியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் பாரியளவிலான நீர்ப்பாசனத்திட்டங்கள் ஏன் தோன்றவில்லை என்பதனை **மூன்று** காரணிகளின் துணையுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

**4. (i)** - மின்னேரியா வாவி

- கவுடுளு வாவி
- கிரித்தலை வாவி
- கந்தளாய் வாவி

(01 × 03 = 03 புள்ளிகள்)

**(ii)** *A* - மினிப்பே அணை

*B* - யோத கால்வாய் / ஜய கங்கை

*C* - மகா பராக்கிரமபாகு / முதலாம் பராக்கிரமபாகு

*D* - வெவ்பிரபாதன / எல்லங்காவ

(01 × 04 = 04 புள்ளிகள்)

**(iii) (a)** - குளக்கட்டு, அலைதாங்கி, மடைக்கதவு (கலிங்கல்), கலிங்கற் தொட்டி, சுருங்கை

**(b)** - குறிப்பிடப்பட்ட தொழில் நுட்பத்தினது அமைப்பையும் பயனையும் குறிப்பிடல் வேண்டும்.

(02 + 01 + 01 + 01 = 05 புள்ளிகள்)

**(iv)**
★ ஈரவலயமாதலால் நீர்ப்பாசன நடவடிக்கைகள் முக்கியத்துவம் பெறவில்லை.
★ நீர்ப்பாசனத்திற்குப் பொருத்தமான பௌதிகக் காரணிகள் காணப்படாமை.
★ வாசனைத் திரவியங்களுக்கு முக்கியத்துவம் அளித்தல்.
★ நெற் செய்கைக்கு மேலதிகமாக பல்வேறு உணவு வகைகள் காணப்பட்டமை.
(பாக்கு, மிளகு, தென்னை, பலா, ஈரப்பலா)
★ பாரிய நீர்ப்பாசன முறைகளை உருவாக்கக்கூடிய சக்திமிக்க மன்னர்கள் உருவாகாமை.
★ ஆட்சியாளர்களால் பாதுகாப்புத் தொடர்பாக கவனம் செலுத்தாமை.
★ குளத்துடன் தொடர்பான தொழில்நுட்பம் இல்லாதொழிதல்.

(03 + 03 = 06 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

**4ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**




04 ஆம் வினாவைத் தெரிவு செய்தோர் 59% ஆகும். இதற்கான புள்ளிகள் 18 ஆகும்.

00 - 04 ஆயிடையில் 37%
05 - 09 ஆயிடையில் 45%
10 - 13 ஆயிடையில் 12%
14 - 18 ஆயிடையில் 6%

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இந்த வினாவுக்கு 14 அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றோர் 6% ஆவர். 37% இனர் 04 புள்ளிகள் அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




- இந்த வினாவின் உபபிரிவுகள் 8 இல் கூடுதலான இலகுதன்மை காணப்படுவது *(iii) A* பிரிவிலாகும். அதன் இலகுதன்மை 90% ஆகும். இலகுதன்மை குறைவாகக் காணப்படுவது *(iv)* உப பிரிவாகும். அதன் இலகுதன்மை 23% ஆகும்.

PAST PAPERS WIKI

முற்காலத்தில் நீர்ப்பாசன முகாமைத்துவம், தொழினுட்பத்தின் தன்மை, நீர்ப்பாசன முகாமைத்துவத்தின் வீழ்ச்சி என்பன தொடர்பாகத் தெளிவான அறிவைப் பரீட்சிக்கும் பொருட்டு இவ் வினா தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த வினாவை 59% மாணோர் தெரிவு செய்துள்ளர்.

இந்த வினாவில் குறைவான இலகுதன்மை பகுதி *(iv)* இல் காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 23% ஆகும். கூடுதலான இலகுதன்மை பகுதி *(ii)* இன் உபபிரிவு *A* ஆக இருப்பதோடு இதன் இலகுதன்மை 90% ஆகும்.

இந்த வினாவின் பகுதி *(i)* இன் இலகுதன்மை 24% ஆகும். நீர் முகாமைத்துவம் தொடர்பாகப் பரீட்சார்த்திகளுக்குப் போதிய விளக்கம் இன்மையே இவ்வாறான குறைவான இலகுதன்மைக்கான காரணமாகும். கால்வாய்கள், குளங்களைக் கட்டிய அரசர்கள் பற்றி அட்டவணையுடன் கூடிய தகவல்களை முன்வைப்பதோடு, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் படங்களைப் பயன்படுத்துதல் என்பவற்றால் கூடுதலான அடைவு மட்டத்தைப் பெறலாம்.

4 ஆம் வினாவின் பகுதி *(ii)* இல் *A, B, C, D* என நான்கு உபபிரிவுகள் உள்ளன. அவற்றின் இலகுதன்மை முறையே 46%, 45%, 56%, 41% ஆகும். அதிகமான மாணவர்களிடையே இது தொடர்பான சரியான விளக்கம் இன்மையே குறைவான இலகுதன்மைக்கான காரணமாகும். அரசர்கள் தொடர்பான தகவல்களை வகுப்பறையில் அடிக்கடி காணக்கூடியதாகக் காட்சிப்படுத்தல் இவ்வாறான குறைந்த இலகுதன்மையை நீக்குவதற்கு உதவும். இவ்வாறான இந்தத் தகவல்களை அட்டணைப்படுத்திக் காட்சிப்படுத்தலும் பொருத்தமானதாக அமையும். அட்டவணையைப் பின்வரும் முறையில் தயாரிக்கலாம்.

| அரசனின் பெயர் | கட்டிய குளம் | அதனுடன் தொடர்புடைய ஆறு | கால்வாய் / சிறுகால்வாய் (அமுணு) |
|---|---|---|---|
| | | | |

*(iii) A* பகுதி சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது. அதன் இலகுதன்மை 90% வரையில் உயர்ந்துள்ளது. குளமொன்றின் பிரிவுகளைக் கொண்ட படத்தை நினைவில் வைத்திருப்பது இலகுவாக உள்ளமையே இவ்வாறான கூடுதலான இலகுதன்மைக்கான காரணமாகும். பாடநூல் மற்றும் அதனுடன் தொடர்பான நூல்களிலுள்ள உருக்கள் மூலம் குளங்களின் பிரிவுகளைக் குறித்துப் பெயரிடப்பட்டிருந்தமை மாணவர்களுக்கு நினைவில் வைத்திருக்க உதவியளித்துள்ளது.

இந்த வினாவின் *B* பகுதியின் இலகுத்தன்மை 46% ஆகும். *(அ)* பகுதியில் பெயரிடப்பட்டுள்ள தொழினுட்பக் கூறின் நிர்மாணிப்பு பயன்பாடு என்பன பற்றி வெவ்வேறாக விளக்கி எழுத இயலாமையே இத்தகைய இலகுதன்மைக்கான காரணமாகும். பாடநூலினை அதிகளவு பயன்படுத்துதல், பயிற்சிகளில் ஈடுபடுத்தல் குளமொன்றின் கட்டமைப்பைக் குழுச் செயற்பாடாக நடைமுறை ரீதியாக மேற்கொள்ளல் என்பன மூலம் இலகுதன்மையை அதிகரிக்கலாம். கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடும்போது களப் பயணத்தின் மூலம் குளமொன்றைப் பார்வையிடுதல், அதன் பின்னர் அதனை அடிப்படையாகக் கொண்டு செயற்பாடுகளை மேற்கொள்ளல், விடயங்களை அட்டவணைப்புடுத்துதல் என்பன அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்குப் பொருத்தமான செயற்பாடாகும். இவை தவிர குளமொன்றின் பிரிவுகளையும் செயற்பாடுகளையும் காணொளி (வீடியோ) கணினி முதலான நவீன தொழினுட்பத்தின் மூலம் மாணவர்களுக்கு விளக்கம் அளிப்பது பயனுள்ளதாகும். தரம் 8 வரலாற்றுப் பாடநூலைப் பயன்படுத்துதல் மூலம் அறிவை மேலும் அதிகரித்துக் கொள்ள முடியும்.

இவ்வினாவின் பகுதி *(iv)* குறைந்த இலகுதன்மையுடையதாகக் காணப்படுகின்றது. அதன் இலகுதன்மை 23% ஆகும். இதற்கான காரணம் பரீட்சார்த்திகள் இவ்வினாவை சரியாக விளங்கிக் கொள்ளாமையும், இதற்கான விடை பாடநூலில் சிறப்பாகக் குறிப்பிடப்படாமையுமாகும். பாட நூலுடன் ஏனைய தரங்களின் பாடநூல்களையும் கற்று, அவை தொடர்பான தகவல்களை மாணவர்களுக்கு முன்வைப்பதன் மூலம் அடைவு மட்டத்தை அதிகரிக்கலாம். கட்டமைப்பு வினாக்களுக்கு விடையளிப்பது தொடர்பான முன்பயிற்சிகளை வழங்குதலும் பொருத்தமானதாகும். மேலும் பாடநூலில் வெவ்வேறு பாடங்களில் உள்ள வரலாற்றுத் தகவல்களைத் திரட்டிக் கற்றல் - கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறையில் பயன்படுத்துதல் முக்கியமானதாகும்.

PAST PAPERS WIKI

**வினா 5**

தேர்ச்சி : முதலாம், இரண்டாம் தலை நகரங்கள் தொடர்பான விடயங்களையும் ஆறாம் பராக்கிமபாகு தொடர்பான விடயங்களையும் முன்வைத்தல்.

**5.** (i) மேல்வரும் *A, B, C* ஆகியவற்றினால் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுடன் தொடர்புடைய ஆட்சியாளர்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

*A* - ஒரு நகரத்திற்குரிய அனைத்து கூறுகளையும் கொண்ட ஆட்சி நிலையமாக அனுராதபுரத்தை மாற்றியமை

*B* - சிகிரியாவை தனது ஆட்சி நிலையமாகத் தெரிவுசெய்தமை

*C* - இராசரட்டையை சோழரின் ஆட்சியிலிருந்து மீட்டு, ஆட்சி நிலையமாக பொலன்னறுவையைத் தெரிவுசெய்தமை (03 புள்ளிகள்)

(ii) *A* - வரலாற்று ரீதியா்ன மாயரட்டைக்குரிய இரண்டாவது நகராக்க ஆட்சி நிலையங்கள் **இரண்டையும்**
*B* - வரலாற்று ரீதியான மலையரட்டைக்குரிய இரண்டாவது நகராக்க ஆட்சி நிலையங்கள் **இரண்டையும்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இரண்டாவது நகராக்கக் காலத்தில் ஆட்சி நிலையங்களைத் தெரிவுசெய்வது தொடர்பில் செல்வாக்குச் செலுத்திய அடிப்படைக் காரணிகள் **இரண்டை** விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் சிறந்த ஆட்சியாளனாகக் கருதப்படுவதற்கு ஏதுவான காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு, அவற்றைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

**5. (i)** *A* - பண்டுகாபய மன்னன்

*B* - முதலாம் காசியப்பன் / சீகிரிய காசியப்பன்

*C* - முதலாம் விஜயபாகு மன்னன் / மகாவிஜயபாகு மன்னன்.

(01 × 03 = 03 புள்ளிகள்)

**(ii)** *A* - தம்பதெனியா, குருநாகலை, யாப்பகுவ, கோட்டை

*B* - கம்பளை, கண்டி

(02 + 02 = 04 புள்ளிகள்)

**(iii)**
- ★ பாதுகாப்பு
- ★ மழைநீரை நம்பி நெல் வேளாண்மை செய்ய முடியுமாக இருக்கின்றமை.
- ★ வளர்ச்சியடைந்து வரும் வெளிநாட்டு வர்த்தகம் (வாசனைத் திரவியங்கள்)
- ★ கரையோர துறைமுகங்களை இலகுவாக அடையமுடியுமாயுள்ளமை.

(02 + 03 = 05 புள்ளிகள்)

**(iv)**
- ★ நாட்டை ஐக்கியப்படுத்தியமை
- ★ வன்னி பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொள்ளல்.
- ★ யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்டமை.
- ★ ஜோதிய என்பவனின் கிளர்ச்சியை அடக்குதல்.
- ★ பொருளாதார ரீதியில் நாட்டை வளப்படுத்தியமை.
- ★ கல்வி வளர்ச்சிக்கு பாரிய சேவையாற்றியமை.
- ★ இலக்கிய வளர்ச்சிக்குப் பாரிய சேவையாற்றியமை.
- ★ சமய சார்பு கொள்கையைக் கடைபிடித்தமை.

( 03 + 03 = 06 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

**5ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**




05 ஆம் வினாவை 20% ஆனோர் தெரிவு செய்திருந்தனர். இவ்வினாவிற்கான புள்ளிகள் 18 ஆகும்.

00 - 04 ஆயிடையில் 50%
05 - 09 ஆயிடையில் 22%
10 - 13 ஆயிடையில் 15%
14 - 18 ஆயிடையில் 13%

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இந்த வினாவுக்கு 14 புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றோர் 13% ஆகும். 50% ஆனோர் 04 அல்லது அதற்கும் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




- ⋆ இந்த வினாவுக்கான உப பிரிவுகள் 7 இல் இலகுதன்மை கூடுதலாக காணப்படுவது *(i) B* ஆகும். அதன் இலகுதன்மை 56% ஆகும். இலகுதன்மை குறைவானது *(ii) B* ஆகும். அதன் இலகுதன்மை 30% ஆகும்.

இராசரட்டை, மாயரட்டை, மலயரட்டை தொடர்பான ஆட்சி நிலையங்கள் பற்றிய தகவல்கள், ஆறாம் பாராக்கிரமபாகு மன்னனின் முக்கியத்துவத்தை மதிப்பிடுதல் என்பவற்றைப் பரீட்சிக்கும் பொருட்டு இந்த வினா தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த வினாவைத் தெரிவுசெய்துள்ளோர் 20% ஆகும். வினாப்பத்திரத்தில் குறைந்த விருப்புக்குரியதான வினா இதுவாகும்.

வினாவின் பகுதி *(i) A, B, C* ஆகிய மூன்று உபபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதியின் இலகுதன்மை முறையே 53%, 56%, 45% ஆகும். பாடநூலின் அறிவு மற்றும் ஏனைய தரங்களில் பெற்ற அறிவு என்பன பரீட்சார்த்திகளிடைளே இன்மையே *C* உபபிரிவின் குறைவான இலகுதன்மைக்கான காரணமாகும். கனிஷ்ட இடைநிலை தரங்களின் பாடநூல்களில் இருந்து பெறப்பட்ட அறிவைப் பயன்படுத்துவதோடு, வகுப்பறைக் கற்பித்தலைப் போன்ற கருத்தரங்குகளிலும் இது தொடர்பான விடயங்களை முன்வைப்பதன் மூலம் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கலாம்.

இவ்வினாவின் பிரிவு *(ii) A, B* என இரு உபபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. *A* பிரிவுக்கான இலகுதன்மை 42% ஆக இருப்பதுடன் *B* பிரிவுக்கான இலகுதன்மை 30% ஆனும். பாடத்துடன் தொடர்புடைய இலங்கைப் படத்தில் ஆட்சி நிலையங்கள் தொடர்பான சரியான விளக்கம் இன்மையே குறைவான இலகுதன்மைக்கான காரணமாகும். மாயரட்டை மலயரட்டை பற்றிய விளக்கமின்மையும் இலகுதன்மை குறைவடையக் காரணமாகும். பாடநூலில் உள்ள படங்களை கற்காதிருந்தமையும் இதற்கான காரணமாகும்.

PAST PAPERS WIKI

இலங்கைப் படத்தில் குறிக்கும்போது நிறங்களைப் பயன்படுத்தி இந்த வலயங்கள் தொடர்பாகத் தெளிவான விளக்கம் அளிப்பதோடு, குழுச்செயற்பாடுகள் மூலம் படத்தில் குறிக்கும் பயிற்சியில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் இலகுதன்மையை அதிகரிக்கலாம்.

5 ஆம் வினாவில் பகுதி *(iii)* தொடர்பாகப் பெறப்பட்டுள்ள இலகுதன்மை 31% ஆகும். பரீட்சார்த்திகள் கேட்கப்பட்ட வினாவை விளங்கிக் கொள்ளாமையே இலகுதன்மை குறைவாகக் காணப்படுவதற்கான காரணமாகும். வினாவுக்கு ஏற்ற விடைகளை எழுத மாணவர்களைப் பயிற்றுவித்தல், மீட்டல் செயற்பாடுகள் என்பவற்றில் ஈடுபடுத்துதல் ஆகியவற்றின் மூலம் அடைவு மட்டத்தை உயர்த்தலாம்.

இவ்வினாவில் பகுதி *(iv)* இன் இலகுதன்மை 34% ஆகும். இலகுதன்மையை அதிகரிப்பதற்கு பல்வேறு அரசர்கள் பற்றி பாடநூலில் பரந்துள்ள தகவல்களை ஒன்றிணைத்து கற்றலின் முக்கியத்துவத்தை விளங்கிக்கொள்ளச் செய்தல் முக்கியமானதாகும்.

**வினா 6**

**தேர்ச்சி :** கண்டி இராசதானியில் ஏற்பட்ட முக்கிய அரசியல் நிகழ்வுகள் பொருளாதார நிலைமை, காணி உரிமை போன்ற பற்றி விளக்கிக் கூறுவர்.

**6.** (i) *A* - முதல் தடவையாக கண்டியில் சுதந்திரமான இராச்சியத்தை அமைத்த மன்னன்
*B* - கி.பி. 1580 இல் மலைநாட்டின் மீது படையெடுத்த சீதாவாக்கையின் ஆட்சியாளன்
*C* - தோனா கத்தரினா என்ற பெயரில் ஞானஸ்நானம் பெற்ற கரல்லியத்தே பண்டாரவின் மகள்
ஆகியோரின் பெயர்களை *A, B, C* ஒழுங்குமுறையில் எழுதுக. (03 புள்ளிகள்)

(ii) *A* - அரச மாளிகையின் பயன்பாட்டுக்காக ஒதுக்கப்பட்ட நிலம்
*B* - பௌத்த விகாரைகளின் பராமரிப்புக்காக வழங்கப்பட்ட நிலம்
*C* - பிரதானிகள் செய்த சேவைக்காக வழங்கப்பட்ட நிலம்
*D* - கோயில்களின் பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்ட நிலம்
ஆகியன என்ன பெயர்களால் அழைக்கப்பட்டன என்பதை *A, B, C, D* ஒழுங்குமுறையில் எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) முதலாம் விமலதர்மசூரிய மன்னன் கண்டி இராச்சியத்தில் தனது சட்டரீதியான உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகப் பின்பற்றிய நடைமுறைகள் **இரண்டினைச்** சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு மேற்கொண்ட படையெடுப்புகள் தோல்வியடைந்தமையில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் **மூன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

**6. (i)** *A* - சேனா சம்மத விக்கிரமபாகு
*B* - முதலாம் இராஜசிங்கன் / சீதாவாக்கை இராஜசிங்கன்
*C* - குசுமாசன தேவி
(01 × 03 = 03 புள்ளிகள்)

**(ii)** *A* - கபடாகம்
*B* - விஹாரகம்
*C* - நிந்தகம்
*D* - தேவாலகம்
(01 × 04 = 04 புள்ளிகள்)

**(iii)** ★ குசுமாசன தேவியை விவாகம் செய்து அரச உரிமையை உறுதிப்படுத்தல்.
★ ரோமன் கத்தோலிக்க மதத்தை விட்டு பௌத்த சமயத்தைத் தழுவுதல்.
★ விமலதர்மசூரியன் என்று பௌத்த பெயரைச் சூடியமை.
★ புனித தந்ததாதுவை கண்டிக்குக் கொண்டு செல்லல்.
(02 + 03 = 05 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

(iv) ★ இயற்கை அரண்கள் காணப்பட்டமை. (மலை அரண், நதி அரண், வன அரண்)

★ மலைநாட்டின் பௌதிகச் சூழல் பற்றிய தெளிவின்மை

★ மலையக மக்கள் அரசனுக்கு விசுவாசமாக இருந்தமை.

★ மலையக மக்களின் கொரில்லாப் போர் முறை

★ மலையக மன்னர்களின் யுத்த தந்திரங்கள்

★ லஸ்கரீன் படை அரசின் பக்கம் சார்ந்தமை.

**(03 + 03 = 06 புள்ளிகள்)**

**6ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**




வினா இலக்கம் 06 இனை 53% ஆனோர் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 18 ஆகும்.

00 - 04 ஆயிடையில் 22%
05 - 09 ஆயிடையில் 22%
10 - 13 ஆயிடையில் 23%
14 - 18 ஆயிடையில் 33%

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இந்த வினாவுக்கு 14 அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றோர் 33% ஆகும். 22% ஆனோர் 04 அல்லது அதைவிட குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




★ இந்த வினாவுக்குரிய உபபிரிவுகள் 9 இல் அதிக இலகுதன்மையாக *(i) C* இருப்பதுடன் அதன் இலகுதன்மை 88% ஆகும். இலகுதன்மை குறைந்தது *(i) B* பகுதியாக இருப்பதுடன் அதன் இலகுதன்மை 36% ஆகும்.

PAST PAPERS WIKI

கண்டி இராச்சியத்தில் நிகழ்ந்த முக்கிய அரசியல் சம்பவங்கள், பொருளாதார தகவல்கள், காணி உரிமையினூடாக அதன் தனித்துவம் என்பன பற்றிய அறிவு விளக்கம் ஆகியவற்றை பரீட்சிப்பதற்காக இவ்வினா தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வினாவின் மொத்த இலகுதன்மை 60% ஆகும்.

இவ்வினாவைத் தெரிவு செய்தோர் 53% ஆவர். ஏனைய வினாக்களுக்கு சார்பளவில் இவ்வினா சாதாரணமட்ட இலகுதன்மையை காட்டுவதுடன் பகுதி *(i)* இன் *A, B, C* ஆகிய மூன்று உபபிரிவுகளைக் கொண்டுள்ளது. அவற்றின் இலகுதன்மை முறையே 53%, 36%, 88% ஆகும். *(i)* உபபிரிவு *B* குறைவான இலகுதன்மை பெறுவதற்கு கண்டி இராச்சியத்தின் அரசர்கள் பற்றிய அறிவும் விளக்கமும் குறைந்தளவில் காணப்பட்டமையே காரணமாகும்.

இவ்வினாவில் பகுதி *(ii)* இன் *A, B, C, D* என நான்கு உபபிரிவுகளைக் கொண்டது. உபபிரிவு *A, C* என்பவற்றின் இலகுதன்மை 50% இற்கும் குறைவாகும். உபபிரிவு *B, D* ஆகியவற்றின் இலகுதன்மை 65% இனை விட கூடுதலாகும். *A, C* என்பவற்றின் விடைகளை மாற்றி எழுதியிருந்தமையே குறைந்த இலகுதன்மை பெற்றதற்கான காரணமாகும். இத்தகவல்களை மாணவர்கள் சரியாக உறுதியாக்கிக் கொள்ளவில்லை என்பது தெரிய வந்துள்ளது. இவ்விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு அட்டவணைகளைப் பயன்படுத்துதல் மிகவும் பயனுள்ளதாகும்.

இவ்வினாவின் பகுதி *(iii)* இன் இலகுதன்மை 68% ஆகும். இது இலகுவாக விடை எழுதக்கூடிய வினாவாக இருந்தபோதும் வினாவுக்குரிய விடயங்களை மாணவர்கள் அறிந்திருந்தபோதும் அதனை விளக்கி எழுதும் திறன் மாணவர்களிடம் இல்லாதிருந்தமையே சிக்கலானதாகத் தெரிய வந்துள்ளது. கட்டமைப்பு வினாக்களுக்கு விடையெழுதும் முன் பயிற்சிகளை ஆசிரியர் செய்வித்தல் இச்சிக்கலுக்குத் தீர்வாக அமையும்.

இவ்வினாவின் பகுதி *(iv)* இன் இலகுதன்மை 64% ஆகும். மேற்குறிப்பிடப்பட்ட வழிமுறையை ஆசிரியர் பின்பற்றுவதுடன் வகுப்பறையில் உரிய நேர எல்லைக்குள் வினாக்களுக்கு விடை எழுதுவதற்கு திசைமுகப்படுத்தல் பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்திப் பயிற்சியளித்தல் வேண்டும்.

**வினா 7**

**தேர்ச்சி :** பிரித்தானியர், இலங்கையைக் கைப்பற்றிக் கொண்ட முறை, பிரித்தானியர்களிடமிருந்து விடுதலை பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தொடர்பாக விளக்கமாக கருத்துச் சொல்வார்.

**7.** (i) பிரித்தானியர்களால் இந்தியாவில் அமைக்கப்பட்ட வர்த்தக நிலையங்கள் **மூன்றினைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) இலங்கை மீது பிரித்தானியர்கள் கவனம் செலுத்துவதற்கு ஏதுவாய் அமைந்த காரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றிய பிரித்தானியருக்கு ஏன் மலையக இராச்சியத்தைக் கைப்பற்ற வேண்டிய தேவையேற்பட்டது என்பதனை **இரண்டு** காரணிகளை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாக விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) கி.பி. 1818 இல் பிரித்தானியருக்கு எதிரான கலகம் ஏற்படுவதிற் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் **மூன்றினைச்** சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

**7. (i)** - கல்கத்தா
- பம்பாய்
- மதுரை

(01 × 03 = 03 புள்ளிகள்)

**(ii)** - இலங்கையின் அமைவிட முக்கியத்துவம்
- இலங்கையில் கறுவா உட்பட பெறுமதி வாய்ந்த வர்த்தகப் பொருட்கள் கிடைக்கப் பெற்றமை.

(02 × 02 = 04 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

**(iii)**
- கடவைகளில் மன்னனுக்கு வரி செலுத்த வேண்டியிருந்தமை.
- கொழும்புக்கும் திருகோணமலைக்கும் இடையே தொடர்புகளை மேற்கொள்வதற்கு மலையக அரசு தடையாக இருந்தமை.
- நாட்டின் மத்தியில் சுதந்திரமான அரசு ஒன்று இருப்பது பிரித்தானிய நிர்வாகத்திற்கு இடையூறாக இருந்தமை.
- கரையோரத்திலும் மலைநாட்டு எல்லையிலும் காவல் நிலையங்களை வைத்திருப்பதனால் யுத்தச் செலவுகள் அதிகரித்தமை.

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

**(iv)**
- கண்ணால் காணாத மன்னனை மக்கள் விரும்பாமை.
- மலைநாட்டுப் பிரதானிகளை புறக்கணித்தமை.
- பௌத்த சமயத்தையும் கலாசாரத்தையும் கவனத்தில் கொள்ளாமை.
- சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் வெல்லஸ்ஸ பிரதேசத்திற்கு முஸ்லிம் முகாந்திரம் ஒருவர் நியமிக்கப்பட்டமை.
- கண்டி சிம்மாசனத்துக்கு உரிமையாளன் ஒருவன் வெளிப்பட்டமை. **(03 + 03 = 06 புள்ளிகள்)**

**7ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**

**வினாவிற்குப் புள்ளிகள் பெற்ற விதம்**




07 ஆம் வினாவைத் தெரிவுசெய்தோர் 78% ஆவர். இந்த வினாவுக்கான புள்ளிகள் 18 ஆகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 00 | - | 04 | ஆயிடையில் | 28% |
| 05 | - | 09 | ஆயிடையில் | 30% |
| 10 | - | 13 | ஆயிடையில் | 20% |
| 14 | - | 18 | ஆயிடையில் | 22% |

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 14 அல்லது அதை விட அதிகமான புள்ளிகளைப் பெற்றவர்கள் 22% ஆகும். 28% ஆனோர் 04 அல்லது அதற்குக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**வினாவின் உபபிரிவுகளுக்கான இலகுத்தன்மை**




**7ஆம் வினாவின் உபபிரிவுகள்**

★ இந்த வினாவுக்கான உபபிரிவுகள் 4 இல் கூடுதலான இலகுதன்மையைக் கொண்டது *(ii)* பகுதியாகும். அதன் இலகுத்தன்மை 81% ஆகும். குறைந்த இலகுத்தன்மையைக் கொண்டது *(i)* பகுதி காணப்படுவதுடன் அதன் இலகுத்தன்மை 41% ஆகும்.

PAST PAPERS WIKI

பிரித்தானியர் ஆதிக்கத்துக்குட்பட்ட கண்டி இராச்சியம் தனது தனித்துவத்தைப் பாதுகாத்தமை பற்றிய தெளிவான விளக்கத்தை பரீட்சிப்பதற்காக இந்த வினா தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வினாவுக்கு விடையளித்தோர் 78% ஆவர்.

பகுதி *(i)*இன் இலகுதன்மை 41% ஆகும். முழுமையாகப் பார்க்கும்போது இலகுத்தன்மை போதுமானதாக இல்லை. இப்பகுதியில் இந்தியாவில் அமைக்கப்பட்ட பிரித்தானிய வர்த்தக நிலையங்கள் பற்றி கேட்கப்பட்டபோதும் அது பற்றிய விடையை மாணவர்கள் எழுத இயலாமைக்கு பாடநூலைக் கையாளுவதில் காணப்படும் குறைபாடே காரணமாகும். பாடத்தைக் கற்பிக்கும்போதே இந்த வர்த்தக நிலையங்களைப் படங்களில் குறித்துப் பெயரிட ஆசிரியர் மாணவர்களைத் தூண்டுதல் மூலம் இத்தகைய நிலைமையை தவிர்த்துக் கொள்ளலாம். 10 ஆம் 11 ஆம் தரங்களில் இத்தகவல்களை உறுதிப்படுத்துவதற்கு பாடநூல்களில் படங்கள் காணப்படாமையும் பிரச்சினையாகும்.

இவ்வினாவின் பகுதி *(ii)* இன் இலகுதன்மை 81% ஆகும். இது மகிழ்ச்சிகரமான நிலைமையாகும். கனிஷ்ட இடைநிலை தரப் பாடநூல்கள் மூலம் பரீட்சார்த்திகள் அறிவைப் பெற்றிருந்தமையே இதற்குக் காரணமாகும்.

இவ்வினாவின் பகுதி *(iii)* இன் இலகுதன்மை 45% ஆகும். குறைந்த இலகுத்தன்மை பெறுவதற்கு பரீட்சார்த்திகள் வினாவைப் பற்றிய சரியான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளாமையே காரணம் எனக் குறிப்பிடலாம். பாடநூலில் இடம்பெறுவனவற்றில் முக்கியமான விடயங்களை இனங்கண்டு எழுதுவதற்குத் திட்டமிடல் மூலம் இத்தகைய சிரமங்களை நீக்கி விடலாம். இங்கு கண்டியின் அமைவிடத்தை காட்டும் இலங்கைப் படத்தைப் பயன்படுத்தி கற்றல் - கற்பிதல் செயன்முறையை ஆசிரியர்கள் நடைமுறைப்படுத்த முடியும்.

பகுதி *(iv)* பெற்ற இலகுதன்மை 48% ஆகும். பரீட்சார்த்திகள் விடயங்களை எழுதியிருந்தபோதும் விளக்கமளிக்கும் குறைபாட்டினால் புள்ளிகள் பெற்ற சதவீதம் குறைவாக உள்ளது. இக்குறைபாட்டை தவிர்க்க 1818 - 1848 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற சுதந்திரப் போராட்டங்கள் பற்றிய முக்கிய விடயங்களை ஒப்பிடும் விதத்திலான அட்டவணையைத் தயாரித்து வகுப்பறையில் காட்சிப்படுத்தல் பொருத்தமானதாகும். அத்துடன் இத்தகைய வினாக்களுக்கு அறிவுறுத்தல் மிக முக்கியமானதாகும். இப் பாடத்துறை தொடர்பான மாணவர் அறிவை விருத்தி செய்வதற்கு கலந்துரையாடல் மேடை விவாத மேடை நடாத்துவதும் மிகப் பொருத்தமானதாகும்.

PAST PAPERS WIKI

# பகுதி III

**வினா 8**

தேர்ச்சி : பிரான்ஸ், ர்'யா போன்ற நாடுகளில் வாழ்ந்தோர் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக செய்த முயற்சிகள் அதன் விளைவுகள் பற்றி தெளிவாக விளங்கிக் கொள்வர்.

**8.** (i) பிரெஞ்சுப் புரட்சியில் செல்வாக்குச் செலுத்திய கருத்துகளை முன்வைத்த தத்துவஞானிகள் **மூவரைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) மேல்வரும் *A, B, C, D* ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு தகவலுக்குமுரிய விடைகளை அடைப்புக்குறிக்குள்ளிலிருந்து தெரிவுசெய்து ஒழுங்குமுறையில் எழுதுக.

*A* - அமெரிக்கப் புரட்சி ஏற்படுவதற்கு அடிப்படையாக அமைந்த சம்பவம்
*B* - சுதந்திர ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் முதலாவது ஜனாதிபதி
*C* - பிரெஞ்சுப் புரட்சியின்போது அந்நாட்டின் ஆட்சியாளர்
*D* - ரஷ்யப் புரட்சிக்குத் தலைமைதாங்கியவர்

(வீ. ஐ. லெனின், பதினாறாம் லூயி, நெப்போலியன் போனபாட், பொஸ்டன் தேநீர் விருந்து, டெனிஸ் மைதான உறுதிமொழி, ஜோர்ஜ் வாஷிங்டன், ஆபிரகாம் லிங்கன், லியோன் ட்ரோட்ஸ்கி) (04 புள்ளிகள்)

(iii) பிரெஞ்சுப் புரட்சியின் பின்னர் அந்நாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் **இரண்டினைச்** சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) ரஷ்யப் புரட்சியினால் அந்நாட்டில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார மாற்றங்கள் ஒவ்வொன்றை உதாரணம் தந்து விவரிக்குக. (06 புள்ளிகள்)

**8. (i)**
- ரூசோ
- வோல்டேயர்
- மொன்டெஸ் கியூ

(01 × 03 = 03 புள்ளிகள்)

**(ii)** *A* - பொஸ்டன் தேநீர் விருந்து
*B* - ஜோர்ஜ் வெரிங்டன்
*C* - பதினாறாம் லூயி
*D* - வீ. ஐ. லெனின்

(01 × 04 = 04 புள்ளிகள்)

**(iii)**
★ பிரான்சின் முடியாட்சி வீழ்ச்சியுற்றமை.
★ பிரான்ஸில் கூட்டாட்சி முறையொன்று தோன்றியது.
★ விவசாயிகளுக்கு சலுகைகள் கிடைத்தமை. (விவசாய நிலங்கள் வழங்கப்பட்டமை.)
★ 1791 ஆம் ஆண்டில் அடிப்படை உரிமைகள் தொடர்பான பிரகடனம் வெளியிட்டமை.

(02 + 03 = 05 புள்ளிகள்)

**(iv)** ★ அரசியல் மாற்றங்கள்
- சார் மன்னர்களின் ஆட்சி வீழ்ச்சியடைந்தமை.
- சமவுடமை ஆட்சி உருவானமை.
- நாட்டு நிர்வாகத்தை நடாத்த மத்தியதர வகுப்பினர் நியமிக்கப்பட்டனர்.
- ரஷ்யா, சோவியத் சமவுடமைக் குடியரசு என்ற பெயரில் அறிமுகமானது.

★ பொருளாதார மாற்றங்கள்
- நிலமானிய முறை முற்றாக நீக்கப்பட்டது.
- சிறிய விவசாய பண்ணைகள், பாரிய விவசாயப் பண்ணைகளாக மாற்றமடைந்தமை.
- தொழிற்சாலைகள் வங்கி, போக்குவரத்து போன்றன மக்கள் மயப்படுத்தப்பட்டமை.
- சொந்த முயற்சியை விட பொது முயற்சிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டமை.

PAST PAPERS WIKI

(03 + 03 = 06 புள்ளிகள்)

**8ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**




08 ஆம் வினாவை 33% ஆனோர் தெரிவுசெய்துள்ளனர். இந்த வினாவுக்கான புள்ளிகள் 18 ஆகும்.

00 - 04 ஆயிடையில் 54%
05 - 09 ஆயிடையில் 25%
10 - 13 ஆயிடையில் 12%
14 - 18 ஆயிடையில் 9%

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இந்த வினாவுக்கு 14 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றோர் 9% ஆவர். 54% த்தினர் 04 புள்ளிகளை அல்லது அதற்குக் குறைந்த புள்ளிகளைப்




- ⋆ இந்த வினாவுக்கான உபபிரிவுகள் 7 ஆகும். அவற்றில் கூடுதலான இலகுத்தன்மை *(ii) A* ஆக இருப்பதுடன் அதன் இலகுதன்மை 79% ஆகும். குறைந்த இலகுதன்மை காணப்படுவது பகுதி *(iv)* ஆகும். அதன் இலகுதன்மை 20% ஆகும்.

உலகின் பல்வேறு நாடுகள் அரசியல், பொருளாதாரம், மனித உரிமைகள் என்பவற்றை வெற்றி கொள்வதற்கு மேற்கொண்ட முயற்சிகள், அவற்றின் விளைவுகள் பற்றி ஒப்பீட்டு ரீதியிலான விளக்கத்தைப் பெறுவதற்காக இவ்வினா தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வினாவைத் தெரிவுசெய்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 33% ஆகும்.

இவ்வினாவின் பகுதி *(i)* இன் இலகுத்தன்மை 36% ஆகும். குறைந்த இலகுத்தன்மைக்கு பிரெஞ்சுப் புரட்சி தொடர்பான நபர்களின் பெயர்களில் பரீட்சார்த்திகளுக்கு பரிச்சயமின்மை காரணமாக இருக்கலாம்.

இவ்வினாவின் பகுதி *(ii) A, B, C, D* என நான்கு உபபிரிவுகளைக் கொண்டுள்ளன. இவற்றின் இலகுதன்மை முறையே 79%, 61%, 70%, 55% ஆகும். வினாவுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடை அடைப்புக்குள்ளிலிருந்து தெரிவுசெய்து எழுதுவதற்கு அறிவுறுத்தப்பட்டமையால் பரீட்சார்த்திகளுக்குச் சரியான விடையை வழங்க இலகுவாக அமைந்திருந்தது.

PAST PAPERS WIKI

பகுதி *(iii)* இன் இலகுதன்மை 24% ஆகும். பிரெஞ்சுப் புரட்சி தொடர்பாகப் பாடநூலில் சமூக, அரசியல், பொருளாதார பிரிவுகளின் கீழ் தகவல்கள் இருந்தபோதும் அத்தகவல்களைப் பிரித்தெடுத்துக் காட்டுவதற்கு முடியாதிருந்துள்ளது. பாடநூலைக் கையாளுவதிலுள்ள குறைபாடு, தகவல்களை முன்வைப்பதிலுள்ள குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வினாவின் பகுதி *(iv)* இன் இலகுத்தன்மை 20% ஆகும். முழுமையான வினாவில் குறைந்த இலகுத்தன்மை பெற்ற பகுதி இதுவாகும். வினாவில் கேட்கப்பட்ட அரசியல், பொருளாதார மாற்றங்களை குறிப்பாக வகைப்படுத்திக்காட்ட பரீட்சார்த்திகளுக்கு முடியாதிருந்தமை இதற்கான காரணமாகும். இத்தகைய வினாக்களுக்கு விடை எழுதும் பயிற்சிகளை வழங்குவது இதனை விடவும் கூடுதலான இலகுத்தன்மையைப் பெறுவதற்கு உதவியாக அமையும்.

## வினா 9

**தேர்ச்சி :** உலக அதிகாரப் போட்டி சம்பந்தமாகவும் அதன் விளைவுகள் தொடர்பாகவும் எடுத்துரைப்பர்.

**9.** (i) குடியேற்றங்களை அமைத்த ஐரோப்பிய நாடுகள் **மூன்றினைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) மேல்வரும் *A, B, C, D* ஆகியவற்றினால் குறிப்பிடப்படும் விபரங்களுடன் தொடர்புடையவர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

*A* - சிறு இராச்சியங்கள் பலவற்றை ஒன்றிணைத்து ஜேர்மனி என்ற பெயரில் ஒரு நாட்டை உருவாக்கியவர்

*B* - காலனித்துவ ஆட்சியை ஏற்படுத்தும் கொள்கையைக் கடைப்பிடித்த ஜேர்மனியப் பேரரசர்

*C* - இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது நட்பு நாடுகள் அணிக்குத் தலைமைதாங்கிய பிரித்தானியப் பிரதமர்

*D* - இரண்டாம் உலக மகாயுத்தத்தின் இறுதியில் எதுவித நிபந்தனைகளும் இன்றி அடிபணியும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட ஜப்பானியப் பேரரசர்

(ஹிரோஹிதோ, முட்சுஹிதோ, வின்ஸ்ரன் சேர்ச்சில், லோய்ட் ஜோர்ஜ், இரண்டாம் வில்லியம் கைசர், ஒட்டோ வொன் பிஸ்மார்க், அடோல்ப் ஹிட்லர், ஜோசப் ஸ்டாலின்) (04 புள்ளிகள்)

(iii) உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை பின்பற்றக்கூடிய நடவடிக்கைகள் **இரண்டினைச்** சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) இரண்டாம் உலக மகாயுத்தத்தின் **மூன்று** விளைவுகளைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

**9. (i)**
- போர்த்துக்கல்
- ஸ்பெயின்
- ஒல்லாந்து
- பிரித்தானியா
- பிரான்ஸ்
- பெல்ஜியம்

(01 × 03 = 03 புள்ளிகள்)

**(ii)**
*A* - ஒட்டோ வொன் பிஸ்மார்க்

*B* - இரண்டாம் வில்லியம் கைசர்

*C* - வின்ஸ்ரன் சேர்ச்சில்

*D* - ஹிரோ ஹிதோ

(01 × 04 = 04 புள்ளிகள்)

**(iii)**
★ பொருளாதாரத் தடையை விதித்தல்.

★ சமாதானப் படைகளை அனுப்புதல்.

★ அணு ஆயுத கட்டுப்பாட்டினை செயல்படுத்தல்.

★ பேச்சுவார்த்தைகளுக்கு இடமமைத்துக் கொடுத்தல்.

(02 + 03 = 05 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

**(iv)** ★ அச்சு நாடுகளின் அணி தோல்வியைத் தழுவின.

★ மனித உயிர்கள் கொல்லப்பட்டதோடு சொத்துக்களும் அழிந்தன.

★ குடியேற்ற நாடுகள் பல சுதந்திரம் பெற்றன.

★ உலக வல்லரசுகளில் மாற்றம் ஏற்பட்டது. (அமெரிக்காவும் ரஷ்யாவும்)

★ ஐக்கிய நாடுகள் சபை தோன்றியது.

★ புதிய அரசுகள் தோன்றின.

★ மார்சல் திட்டம் ஆரம்பமானது.

★ கெடுபிடியுத்தம் தோன்ற ஆரம்பித்தது.

★ அணு ஆயுத பிரயோகத்தால் எதிர்கால சந்ததிகள் பாதிக்கப்பட்டன.

★ அணிசேரா நாடுகள் அமைப்பு உருவாகியமை.

★ ஜெர்மனி இரண்டாகப் பிரிக்கப்பட்டமை. **(03 + 03 = 06 புள்ளிகள்)**

**9ஆம் வினாவுக்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்:**

**வினாவிற்குப் புள்ளிகள் பெற்ற விதம்**




09 ஆம் வினாவை 65% த்தினர் தெரிவு செய்துள்ளனர். இந்த வினாவுக்கான புள்ளிகள் 18 ஆகும்.

00 - 04 ஆயிடையில் 28%
05 - 09 ஆயிடையில் 32%
10 - 13 ஆயிடையில் 20%
14 - 18 ஆயிடையில் 20%
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இந்த வினாவுக்கு 14 அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றோர் 20% ஆகும். 28% ஆனோர் 04 அல்லது அதற்கும் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**வினாவின் உபபிரிவுகளுக்கான இலகுத்தன்மை**




**9ஆம் வினாவின் பிரிவுகளும் உபபிரிவுகளும்**

★ இந்த வினாவின் உபபகுதிகள் 7 இல் இலகுத்தன்மை கூடுதலாகக் காணப்படுவது *(ii) A* இல் ஆகும். அது 70% ஆகும். குறைந்த இலகுத்தன்மை பகுதி *(iii)* ஆக இருப்பதுடன் அதன் இலகுதன்மை 40% ஆகும்.

PAST PAPERS
WIKI

உலக அதிகாரப் போட்டி, அதன் விளைவுகள் என்பன பற்றிய விளக்கத்தைப் பரீட்சிப்பதே இவ்வினாவின் நோக்கமாகும். இவ்வினாவை 65% ஆனோர் தெரிவு செய்துள்ளனர். வினாவின் மொத்த இலகுத்தன்மை 57.57% ஆகும். III ஆம் வினாத்தாளின் உலக வரலாறு தொடர்பான பலரின் விருப்பு வினா இதுவாகும்.

இவ்வினாவின் பகுதி *(i)* இன் இலகுத்தன்மை 64% ஆகும். இங்கு குடியேற்ற நாடுகளை ஏற்படுத்திய மூன்று நாடுகள் தொடர்பாகக் கேட்கப்பட்டுள்ளது. ஆகக் குறைந்தது இலங்கையைக் கைப்பற்றிய மேற்குலக நாடுகள் மூன்றின் பெயரைக் குறிப்பிட்டிருந்தாலே இதற்கு 100% புள்ளிகள் பெற வாய்ப்பிருந்தபோதும் பரீட்சார்த்திகள் இதனைச் செய்ய முடியாதிருந்தனர். பாட விடயங்கள் பற்றி மாணவர்கள் கவனக் குறைவாக இருப்பது தெரிய வந்துள்ளது.

இவ்வினாவின் பகுதி *(ii) A, B, C, D* என நான்கு உபபிரிவுகளைக் கொண்டுள்ளது. இவற்றின் இலகுத்தன்மை 70%, 51%, 60%, 64% ஆகும். முழுமையான இலகுத்தன்மை 61.25% ஆகும். கூடுதலான இலகுத்தன்மை பெறுவதற்கு அடைப்புக்குறிக்குள்ளிருந்து விடைகளைத் தெரிவு செய்தமை காரணமாகும் எனலாம். இது பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவு செய்ய உதவியுள்ளது.

இவ்வினாவின் பகுதி *(iii)* இன் இலகுத்தன்மை 40% ஆகும். குறைந்த இலகுத்தன்மை பெற்ற பகுதி இதுவாகும். உலக சமாதானத்திற்காக ஐக்கிய நாடுகள் சபை பின்பற்றக்கூடிய நடவடிக்கைகளே இங்கு எதிர்பார்க்கப்பட்டது. சமகாலப் பிரச்சினையான இவ்விடயம் பற்றி மாணவர்களின் அறிவு மிகவும் அதிகமாக இருத்தல் வேண்டும். மாணவர்கள் பாடநூலைப் போன்றே அன்றாடம் உலகில் நிகழும் சம்பவங்கள் பற்றியும் கவனம் செலுத்தமாமையே இதற்குக் காரணமாக அமைந்தது எனலாம்.

இவ்வினாவின் பகுதி *(iv)* இன் இலகுத்தன்மை 54% ஆகும். இதனை விட கூடுதலான இலகுத்தன்மையை பெற்றிருக்கும் வாய்ப்பிருந்தது. விடயங்களை எழுதியிருந்தபோதும் அதை விளக்கும் திறனில் மாணவர்களுக்கு காணப்பட்ட குறைபாடே இதற்குக் காரணமாகும். இவ்வாறான கட்டுரை வகை வினாக்களுக்கு ஆசிரியர் மேற்பார்வையில் குறிப்பிட்ட நேரத்தினுள் விடை எழுதுவதற்கு பயிற்சி வழங்குதல் பொருத்தமான தீர்வாக அமையும்.

PAST PAPERS WIKI

2.2.3 II ஆம் வினாத்தாளிற்கு அளிக்கப்பட்ட விடைகள் தொடர்பான முழுமையான அவதானிப்புகளும், முடிவுகளும், ஆலோசனைகளும் :




## பகுதி I

பகுதி I இற்கு வினா I இற்கு மட்டும் உரியதாகும். அது கட்டாய வினாவாகும். இவ்வினா (அ) *(i), (ii),* (ஆ) *(i), (ii), (iii)* எனும் உபபிரிவுகளைக் கொண்டாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வினாவிற்குரிய புள்ளிகள் 30 ஆகும். இலங்கை வரலாறு பற்றிய தகவல்களைக் கொண்டனவாக (அ) *(i),* (ஆ) *(i) B, C* எனும் உபபிரிவுகளும் பகுதி (ஆ) இல் *(ii) 1, 2, 3, 4,* (ஆ) *(iii), 1, 2, 3, 4* உபபிரிவுகளும் உள்ளன. உலக வரலாறு தொடர்பான தகவல்களைக் கொண்டனவாக (அ) *(ii),* (ஆ) *(i) A, D* எனும் உபபிரிவுகளும் உள்ளன. முதலாம் வினாவின் இலகுத்தன்மை இலங்கை வரலாறு 44% உம் உலக வரலாறு 40% உம் ஆகும்.

இலங்கை வரலாறு தொடர்பான வினாக்களில் கூடுதல் இலகுத்தன்மையை பகுதி (ஆ) *(ii) (i)* உபபிரிவில் காணப்படுகின்றது. அது 88% ஆகும். இதில் பரீட்சிக்கப்பட்ட விடயம் (மகாபராக்கிரமபாகு மன்னனின் பிறப்புடன் தொடர்புடைய தெடிகம கொட்ட விகாரையில் கண்டெடுத்த) தெடிகம யானை விளக்குடன் தொடர்பான தகவலாகும். உருவைக் கண்டவுடன் விடை எழுத இலகுவானமை கூடுதல் இலகுதன்மை பெறுவதற்குக் காரணமாகியது.

இலங்கை வரலாற்றில் குறைந்த இலகுத்தன்மையை பகுதி (ஆ) *(iii) 4* உபபிரிவு பெற்றுள்ளது. இதன் இலகுத்தன்மை 30% ஆகும். இதில் பரீட்சிக்கப்பட்ட விடயம் பொலன்னறுவை காலத்துக்குரிய சோழர் கட்டிடக் கலைப்பாணிக்கு உரிய சிவ தேவாலயம் *(ii)* தொடர்பான தகவல் ஆகும். இங்கு இக்காலத்தில் இருந்த சோழ ஆட்சியாளர், நாடு இனம் என்பன பற்றிய சிறந்த அறிவினைப் பெற்றுக் கொள்ளாதிருந்தமை குறைந்த இலகுத்தன்மையைப் பெறக் காரணமாகியது. மேலும் படத்தைப் பற்றி மட்டுமே கவனத்தைச் செலுத்தியமையுமாகும்.

உலக வரலாற்றில் குறைந்த இலகுத்தன்மையை (அ) *(ii)* உலகப் படப்பகுதி பெற்றுள்ளது. இதன் இலகுத்தன்மை 36% ஆகும். இலங்கைப் படத்தில் குறித்துப் பெயரிடுவதைக் காட்டிலும் அதிக இலகுத்தன்மையை உலகப்படம் பெற்றுள்ளமை கவனத்தில் கொள்ளக்கூடியதாயுள்ளது.

PAST PAPERS WIKI

இலங்கைப்படம், உலகப்படம் என்பவற்றில் குறித்துப் பெயரிடுதல் தொடர்பாக இரண்டிலும் இலகுத்தன்மை குறைவாக உள்ளது. படங்களில் குறித்துப் பெயரிடும்போது படவரைகலைக்குரிய அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்றாமை, பயிற்சிகளில் ஈடுபடும்போது மாணவர்களுக்குப் போதுமான வளங்களை வழங்காமை, பாடம் தொடர்பான படங்களைத் தேவையானபோது ஆசிரியர் பயன்படுத்தாமை என்பன பொதுவான குறைபாடுகளாகும். இதனைத் தவிர்ப்பதற்குத் தரம் 10, 11 இற்கான பாடநூல்களில் எல்லா அலகுகளினதும் இறுதியில் இலங்கை அல்லது உலக வரலாற்று இடங்களைக் குறித்துப் பெயரிடுவதற்கு ஆசிரியர் வழிகாட்டுதல் அவசியமாகும். கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின்போது இலங்கைப்படம், உலகப்படம் என்பவற்றைப் பயன்படுத்தல் அத்தியாவசியமாகும்.

இலங்கைப் படத்தில் குறிக்கும்போது ஆறுகளுடனான இலங்கைப் படத்தில் மட்டும் பயிற்சி வழங்குதல் மூலம் மாணவர்களிடையே படங்களில் குறித்தும் பெயரிடும் திறனை மேலும் வளர்த்துக்கொள்ள முடியும்.

இலங்கை, உலகப் படங்களில் குறித்துப் பெயரிடுதல் தொடர்ச்சியான செயற்பாடாக மேற்கொள்வது முக்கியமானதாகும். அனைத்து வகுப்பறைகளிலும் இலங்கைப்படம் உலகப்படம் என்பவற்றைக் காட்சிப்படுத்தல் மாணவர்களுக்கு மட்டுமன்றி ஆசிரியர்களுக்கும் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் முக்கியமானதாகும்.

தரம் 10, 11 இல் பொருத்தமான எல்லாப் படங்களையும் வழங்கி அவை தொடர்பான முக்கிய விடயங்களை தயாரித்து அவற்றை மாணவர்கள் பரிசீலனை செய்ய ஈடுபடுத்தல் நல்லது.

## பகுதி II

இலங்கை வரலாற்றுக்கான இலகுத்தன்மை 51% ஆகும். இப்பகுதியில் 06 வினாக்கள் உள்ளன. இவற்றுள் விடை எழுத வேண்டியவை 04 ஆகும். வினா 2 தொடக்கம் 7 வரையான இலகுத்தன்மை முறையே 93%, 93%, 59%, 20%, 53%, 78% ஆகும். இவற்றுள் வினா 02, 03 என்பவற்றை அதிகமானோர் தெரிவு செய்துள்ளனர். வினா 2 இல் இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதர்களின் தகவல்கள் தொடர்பான விடயங்களே பரீட்சிக்கப்பட்டிருந்தன. இத்தகவல்கள் தொடர்பான சூழலியல் வலயங்கள், மரணச்சடங்குகள், தொழினுட்ப அறிவு பற்றி விளக்கங்கள் பரீட்சிக்கப்பட்டன. அதிக கவனம் செலுத்துவதற்காக முன்பயிற்சி வினாத்தாள்களில் இவ்வகை வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருந்தமை, விடைகள் வழங்கப்பட்டிருந்தமை என்பன செல்வாக்குச் செலுத்தியிருந்தது. வினா 2, 3 ஆகியவை ஒத்த இலகுத்தன்மை பெற்றுள்ளன. இவ்வினாக்களில் பல்வேறு சமூக படித்தரங்களிலுள்ள நபர்களின் பதவி பெயர்கள் அரசனின் பணியாளர்கள் அவர்களின் கடமைகள் என்பன பற்றிப் பரீட்சிக்கப்பட்டிருந்தது. பரீட்சார்த்திகள் இரு வினாக்களையும் தெரிவு செய்திருந்தபோதும் வினா 3 கூடுதல் இலகுத்தன்மையை பெறுவதற்கு இவ்வினாவின் அனைத்து உபபிரிவுகளும் விடை எழுதுவதற்கு இலகுவான முறையில் தயாரிக்கப்பட்டிருந்தமை காரணமாக அமைந்தது. இப்பகுதியில் குறைந்தளவு தெரிவு செய்யப்பட்ட வினா 5 ஆகும். அது 20% ஆகும். இவ்வினாவில் இராசரட்டை, மலயரட்டை, மாயரட்டை ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் முக்கியத்துவத்தை மதிப்பிடும் திறன் என்பன பரீட்சிக்கப்பட்டன. இவ்வினாவைத் தெரிவு செய்தமை பற்றி பரிசீலிக்கும்போதுஇதைவிட மிக இலகுவான வினாக்கள் இருந்தமையையும் அவற்றை மாணவர்கள் தெரிவு செய்திருந்தமையையும் காணக்கூடியதாயிருந்தது. இங்கு சில பகுதிகள் இலகுவாக இருந்தபோதும் அதிக பகுதிகள் விடை எழுதுவதற்கு சிரமமாக இருந்தமை தாக்கம் செலுத்தியுள்ளது.

இலங்கை வரலாறு பற்றிய கற்றல் - கற்பித்தல் செயன்முறை விருத்திக்கு எல்லாப் பாட அலகுகளின் இறுதியிலும் வினா விடை அடங்கிய புத்தகம் ஒன்றை மாணவர் உருவாக்க ஈடுபடுத்தல் முக்கியமானதாகும். மேலும் அனைத்து வினாக்களிலும் 3 ஆம் 4 ஆம் பகுதிகளுக்கு விடை எழுதுவதற்கு ஆசிரியரின் மேற்பார்வையில் குறித்த நேர எல்லைக்குள் எழுதுவதற்கு மாணவர்களுக்கு பயிற்சி வழங்குதலும் அவை சரிவர இடம்பெறுகின்றதா என்பதை அவதானித்தலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

PAST PAPERS WIKI

மேலும் ஆண்டுக்கு ஒரு முறையேனும் வரலாற்றுப்பாடம் தொடர்பில் பாடசாலை மட்டத்தில் கண்காட்சி ஒன்றினை நிகழ்த்துதலின் மூலம் வினைத்திறனான கற்றல் சந்தர்ப்பங்களை வழங்க முடியும்.

பகுதி III

உலக வரலாற்றுப் பகுதியில் இலகுத்தன்மை 44% ஆகும். இவ்வினா 08, 09 என இரு வினாக்கள் கொண்டது. தெரிவுசெய்யப்பட்ட விதத்துக்கு அமைய வினா 08 இனை 33% ஆனோரும் வினா 9 இனை 65% ஆனோரும் தெரிவுசெய்துள்ளனர். அதிகளவிலானோர் தெரிவு செய்த வினா 9 ஆகும். குறைந்த அளவினர் வினா 8 இனை தெரிவு செய்துள்ளனர். உலகின் பல்வேறு நாடுகளின் அரசியல் பொருளா-தாரம் மனித உரிமைகள் வெற்றி கொள்வதற்கு செய்த முயற்சிகள் அவற்றின் விளைவுகள் என்பன பரீட்சிக்கப்பட்டன. புரட்சிகள் பலவற்றின் தகவல்கள் பற்றிய சரியான தகவல்களைக் குறிப்பிட முடியாது பரீட்சார்த்திகள் குழப்பமடைந்தமையும் சிரமப்பட்டமையுமே இவ்வினாவைக் குறைந்த அளவிலானோர் தெரிவு செய்தமைக்கான காரணமாகும். வினா 9 இல் உலக அதிகாரப் போட்டியின் இயல்பு அதன் விளைவுகள் என்பன பற்றிய விளக்கம் பற்றியே பரீட்சிக்கப்பட்டது. வினா 8 இற்கு சார்பளவில் இவ்வினா விருப்புத்தலைப்பாக அமைந்தது இதற்கான காரணமாகும். அது போன்றே எல்லாப் பகுதிகளும் கூடுதல் இலகுத்தன்மை பெற்றமை சிறப்பு அம்சமாகும். ஆரம்ப, இடைநிலைக் கல்வியிலும் பொது ஊடகங்களிலும் இது பற்றி அதிக விளக்கம் பெற்றிருந்தமை இதற்கான காரணமாகும்.

உலக வரலாற்றுக்குரிய 4 பாட அலகுகள் தொடர்பாக தேவையான கற்றல் உபகரணங்களை இணையத்தளத்தினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும். இவ்விடயங்கள் அடங்கிய காணொளிகளை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்தலின் மூலம் இந்த அலகு தொடர்பான விடயங்களை இலகுவாகக் கிரகிக்கச் செய்யக் கூடியதாக இருக்கும். மேலும் இது மாணவர்களுக்கு பொழுதுபோக்கு நிகழ்ச்சியாகவும் அமையும்.

PAST PAPERS WIKI

## பகுதி III

## 3 விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும் :

### 3.1 விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள் :

**பொது அறிவுறுத்தல்கள் :**

- ⋆ வினாத்தாளிலுள்ள அடிப்படை அறிவுறுத்தல்களை வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் விடையளிக்கப்பட வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை, கட்டாய வினாக்கள் யாவை, எவ்வளவு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது, புள்ளி ஒதுக்கீடு எவ்வளவு என்பவை பற்றிய விடயங்களைக் கவனத்திற் கொள்வதுடன் வினாக்களை நன்கு வாசித்துத் தெளிவான விளக்கம் பெற்ற பின்னர் விடையளிக்க வேண்டிய வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- ⋆ முதலாம் வினாத்தாளிற்கு விடையளிக்கும்போது மிகச் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்தல் வேண்டும். பின்னர் தெளிவாக ஒரு புள்ளடி அடையாளத்தை இடுதல் வேண்டும்.
- ⋆ இரண்டாம் வினாத்தாளிற்கு விடையளிக்கும்போது ஒவ்வொரு பிரதான வினாக்களையும் விடைத்தாளின் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் நன்று.
- ⋆ திருத்தமான தெளிவான கையெழுத்தில் எழுத வேண்டும்.
- ⋆ சுட்டெண்களைத் தெளிவாக ஒவ்வொரு பக்கத்திலும் உரிய இடங்களில் எழுதுதல் வேண்டும்.
- ⋆ வினா இலக்கத்தையும் பகுதி வினாக்களின் இலக்கங்களையும் உபபகுதி வினாக்களின் இலக்கங்களையும் தெளிவாக திருத்தமாக எழுதுதல் வேண்டும்.
- ⋆ சுருக்கமாக விடை எழுத வேண்டியவைக்கு நீண்ட விடைகளையும், விளக்கமாக விடை எழுத வேண்டியவைக்கு சுருக்கமான விடைகளையும் எழுதுவதைத் தவிர்த்தல் வேண்டும்.
- ⋆ வினாக்கள் கேட்கப்படும் விதத்துக்கேற்றவாறு தர்க்க ரீதியாகவும் பகுப்பாய்வு ரீதியாகவும் விடயங்களை முன்வைத்தல் வேண்டும்.
- ⋆ குறிப்பிட்ட வினா எண்ணிக்கைகளுக்கு மட்டும் உரிய நேரத்தில் விடை எழுதுவதுடன் மேலதிக விடைகளை எழுதுவதற்கு நேரத்தை ஒதுக்கக் கூடாது.

**விசேட அறிவுறுத்தல்கள் :**

- ⋆ தேசப்படங்களில் குறித்துப் பெயரிடும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை :
  - நகரங்களைக் குறிக்கும்போது மிகச் சரியான இடத்தில் புள்ளியிட்டுப் பெயரிடுதல்.
  - இராச்சியங்கள், குளங்கள் என்பவற்றைக் குறிப்பிட உரிய பிரசேதத்தை நிழற்றிக் காட்டுதல்.
  - ஆறுகள் மலைகள் என்பவற்றைக் குறிக்கும்போது அவற்றை இனங்காணும் விதத்தில் பெயரிடுதல்.
- ⋆ கேட்கப்படும் வினாக்களுக்குப் பொருத்தமானவாறு விடைகளைத் தொகுத்து முன்வைத்தல்.
- ⋆ விடயங்களைக் குறிப்பிடுதல் அவற்றை விளக்குதல், விவரித்தல், சான்றாதாரம் காட்டுதல் என்பவற்றுக்கேற்பவே வினாக்களுக்குரிய புள்ளிகள் வழங்கப்படுகின்றன என்பதை விளங்கிக் கொள்ளுதல்.
- ⋆ கட்டமைப்பு வகை வினாக்களில் உதாரணங்கள், விடயங்கள் என்பவற்றை முன்வைத்தல் வேண்டும்.
- ⋆ உப தலைப்புகளுடன் விடைகளைப் பந்தி பந்தியாக வேறுபடுத்தி எழுதுதல் வேண்டும்.

PAST PAPERS WIKI

**அதிபர்களுக்கான ஆலோசனைகள் :**

- ★ பாட விருத்தியின் பொருட்டு வருடாந்த செயற் திட்டத்தினை தயாரித்து அவற்றைச் செயற்படுத்துவதற்கும் வழிகாட்டுவதற்கும் அனுசரணை வழங்குவதை மேலும் பரவலாக்குதல்.
- ★ பாட விருத்தியின் பொருட்டு உள்ளக மதிப்பீடு, மேற்பார்வை செயன்முறை என்பவற்றை உரிய காலத்தில் திட்டமிட்டு ஒழுங்கான முறையில் செயற்படுத்துதல்.
- ★ ஆசிரியர்களின் பாட அறிவினை விருத்தி செய்வதற்கென கோட்டம், வலயம், அமைச்சு ஆகிய மட்டங்களில் நடாத்தப்படும் கருத்தரங்குகளில் பங்குபற்ற ஆசிரியர்களுக்கு சந்தரப்பம் அளித்தல்.
- ★ கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்குப் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்களைத் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ★ நேர அட்டவணை தயாரிக்கும்போது பாட நிபுணத்துவமுடைய ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்குதல்.
- ★ ஆசிரியர்களுக்கு அவர்களது பாடந்தொடர்பான பொறுப்பு ஏற்படும் வகையில் பாடத்திட்டத்தை செயற்படுத்தப்பட சந்தர்ப்பம் வழங்குதல். (குறிப்பிட்ட மாணவர் குழுவொன்றை ஒரே ஆசிரியரின் கீழ் சில வருடங்கள் அப்பாடத்தினைக் கற்க வழிசெய்தல்.)
- ★ வருடாந்த பரிசளிப்பு, சான்றிதழ் வழங்குதல் போன்றவற்றில் மேலும் கவனம் செலுத்துதல்.
- ★ வரலாறு பாட அபிவிருத்தியின் பொருட்டுப் பாடசாலையில் காணப்படும் வளங்களுக்கு அமைய இடம், உபகரணங்கள், நூல்கள், புறவுருப்படங்கள் என்பவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- ★ ஏனைய பாடங்களில் பயிற்சி பெற்ற அல்லது நியமனம் பெற்ற ஆசிரியர்களின் நேர அட்டவணையை நிறைவு செய்யும் நோக்கில் வரலாறு கற்பித்தலில் அவர்களை ஈடுபடுத்துதலைத் தவிர்த்தல்.

**பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள் :**

- ★ க.பொ.த. (சா.தர)த்திற்கு உரிய பாடத்திட்டத்தை பூரணப்படுத்தும் விதத்தில் கற்றல் கற்பித்தலை திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும்.
- ★ கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஆசிரியர் அறிவுரைப்புக் கையேட்டினை பரிசீலித்து அதனையும் கற்பித்தல் உபகரணமாகப் பயன்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துதல்.
- ★ கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் குறிப்பிட்ட தேர்ச்சி, பாட உள்ளடக்கம் என்பவற்றிற்குப் பொருத்தமான கற்பித்தல் முறையைத் தெரிவு செய்தல்.
- ★ இயன்றவரை கற்பித்தல் உபகரணங்களினூடாக எண்ணக்கரு அடைவிற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.
- ★ க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை தொடர்பான இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளை மூலம் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு அறிக்கையைப் பரிசீலனை செய்து அதனைப் பாட அபிவிருத்தியின் பொருட்டுப் பயன்படுத்துதல்.
- ★ குறைந்த அடைவு மட்டத்தைக் காட்டும் பாடப் பகுதிகள் தொடர்பாக விசேட வேலைத்திட்டம், செயற்றிட்டம், ஒப்படை போன்றவற்றை செயற்படுத்துதல்.

PAST PAPERS WIKI

3.2 கற்றல் - கற்பித்தல் செயன்முறை பற்றிய கருத்துக்களும் ஆலோசனைகளும் :

★ **கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டு செயன்முறை என்பன மூலம் பெறுபேற்றில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் பொருட்டு மேற்கொள்ள வேண்டியவை :**

- கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்தல்.
- பாட செயற்பாடுகளை ஆர்வமூட்டும் வகையில் ஒழுங்கு செய்தல்.
- திட்டமிட்ட களப்பயணங்களை ஒழுங்கமைத்தல். (பாடப் பரப்புடன் தொடர்புடைய)
- குறிப்பாக பாடநூல்களைக் கற்பதற்கு ஊக்கமளித்தல்.
- மாணவரின் ஆக்கங்களை (பாடத்துடன் தொடர்புடைய) வகுப்பில் காட்சிப்படுத்தல். சுவர்ப் பத்திரிகை, சஞ்சிகைகள், புதிர்கள், குறுவினாக்கள் ஆகியவற்றை தயாரித்தல்.
- வரலாறு பாடத்துக்கென அறை அல்லது ஒரு பகுதியை ஒதுக்கி அபிவிருத்தி செய்தல்.
- திறந்த நூல் பரீட்சைகளில் மாணவர்களை ஈடுபடுத்தி விடயங்களைத் தேடியறியச் செய்தல்.
- திருத்தமான புறவரிப்படங்களைப் பயன்படுத்துதல், படங்களின் தொகுப்பு நூல் தயாரிக்கச் செய்தல்.
- விடைகளை எழுதும்போது விடயங்களை ஒழுங்கமைத்தல், பயிற்சிகளைச் செய்வித்தல்.
- கிராமம், பிரதேசம், நாடு என்பவற்றின் வரலாற்று இடங்கள், நிகழ்வுகள் என்பவற்றை மரபு வழிக் கதைகள் போன்றன மூலம் தேடியறிந்து தகவல்கள் சேகரிப்பதில் மாணவர்களை ஈடுபடுத்துதல்.
- தொலைக்காட்சி, வானொலி, செய்திப்பத்திரிகைகளின் கல்வி நிகழ்ச்சிகள், கலந்துரையாடல்கள் கட்டுரைகள் ஆகியன மூலம் தகவல்கள் சேகரிப்பதில் மாணவர்களை ஈடுபடுத்தல்.
- பிரபல வரலாற்று அறிஞர்களின் உதவி பெறுதல்.
- நுண்மதிக் குழுக் கலந்துரையாடல், பாடசாலையினுள்ளேயும் வேறு பாடசாலைகளுடனும் இணைந்து ஒழுங்கமைப்புகளை ஏற்படுத்துதல்.

PAST PAPERS WIKI